விதேகை vitēkai, *n.*<*videhā*. 1. Mithilā, capital city of Vidēha; மிதிலை. (பிங்.) 2. (Śaiva.) Meditation by a liberated soul on its own experience of Bliss; முத்தியடைந்த காலத்தில் தன் ஆனந்தவனுபூதியைத் தியானித்திருக்கை. (சி. சி 4, 35, மறைஞா.)

விதேசம் vitēcam, *n.* <*vi-dēśa*. 1. Distant country; தூரதேசம். (யாழ். அக.) 2. Foreign country; அந்நிய தேசம். (இலக். அக.)

விதேயம் vitēyam, *n.* <*vidhēya*. 1. (Log.) Major term; சாத்தியம். (சங். அக.) 2. That which is enjoined or directed; விதிக்கப் பட்டது. *Loc.*

விதேயன் vitēyaṉ, *n.* <*vidhēya*. Humble servant; one who is docile, compliant or submissive; சொன்னபடி கேட்டு நடப்பவன். (யாழ். அக.)

விதை[1] vitai, *n.* [T. *veda*, K. Tu. *bede*, M. *vida*.] 1. Seed; மரஞ்செடிகொடிகளின் பழங்களி லுள்ளதாய் அம்மரஞ்செடிகொடிகள் முளைப்பதற்குக் காரணமாயிருக்கும் வித்து. விதைத்தவிதை (மதுரைக். 11, உரை). 2. Testicle; பீசம். (நாமதீப. 579.) 3. (Phil.) The subtle, primary element; தன் மாத்திரை. பரிசவிதை யிரதத்தி லெழுவதாய காற் றனைவை (ஞானவா. தாசூ. 34).

விதை[2]-த்தல் vitai-, *11 v. tr.* <விதை[1]. 1. To sow seed; விதை தெளித்தல். 2. To publish, make public; to spread abroad; பரப்புதல். *Loc.* 3. To deliver, throw, discharge; பிரயோகித்தல். விதைக்கு மப்பகழிவிற் பொருநன (தக்கயாகப. 726).

விதை[3] vitai, *n.* <*vidā*. Knowledge, wisdom; அறிவு. (இலக். அக.)

விதை[4] vitai, *n.* prob. *pṛthu*. Largeness; greatness; பெருமை. (சது.)

விதைக்காய்ச்சல் vitai-k-kāyccal, *n.* <விதை[1]+. Drying of seed-grain; விதைப்பக் குவம் அடையும்படி தானியத்தை உலர்த்துகை.

விதைக்கொட்டை vitai-k-koṭṭai, *n.* <id. +. Testicle; பீசம்.

விதைக்கொடி vitai-k-koṭi, *n.* <id.+. Spermatic cord; பீசப்பையிலிருக்கும் நரம்புவகை. (M. L.)

விதைக்கோட்டை vitai-k-kōṭṭai, *n.* <id. +கோட்டை[1]. 1. Superficial measure = 1·62 acres, as requiring a *kōṭṭai* of seeds; ஒரு கோட்டை விதைப்பாடுள்ள நிலவளவு. (M. M. 968.) 2. Seed-grain of paddy bundled in straw; வைக்கோற் புரியிற் கட்டிய விதைநெல்.

விதைகட்டு-தல் vitai-kaṭṭu-, *v. intr.* <id.+. To store seed-grain by bundling it up in straw; விதைக்கென்று தானியம் தனியே கட்டிவைத்தல்.

விதைத்துப்பாழ் vitaittu-p-pāḻ, *n.* <விதை-+. Total failure of crop due either to the seeds not sprouting properly or the seedlings not maturing on account of scanty supply of water; தண்ணீர்த்தட்டால் விதை செவ்வனே முளைக்காமலேனும் கதிர் பிடிக்காமலேனும் கெட்டுப் பயிரின்றிப்போகை. (S. I. I. vii, 279.)

விதைநெல் vitai-nel, *n.* <விதை[1]+. Seed-grain of paddy; விதைப்பதற்காக வைக்கப் பட்ட நென்மணி.

விதைநெல்லெறி-தல் vitainel-l-eri-, *v. intr.* <விதைநெல்+. To sow seeds of paddy; நெல் விதையைக் கழனிகளில் தூவுதல். (W.)

விதைப்பாடு vitai-p-pāṭu, *n.* <விதை[1]+. 1. Quantity of seed required to sow a plot of land; குறிப்பிட்ட அளவுள்ள நிலத்தில் விதைத்தற்கு வேண் டிய நென்மணியளவு. (M. M.) 2. Standard area for sowing a specified quantity of seed, as *kalam*, etc.; கலம் சோட்டை முதலிய அளவு கொண்ட விதைகளை விதைத்தற்குரிய நிலம். 3. Shortage allowed for, in paddy seeds; விதை நெல்லி லுண்டாகும் குறைவு. *Loc.*

விதைப்பு vitaippu, *n.* <விதை-. Sowing; வித்திடுகை. விதைப்புக்காலம்.

விதைப்புக்காலம் vitaippu-k-kālam, *n.* <விதைப்பு+. Sowing season; seed-time; விதை விசிறும் பருவம்.

விதைப்புனம் vitai-p-puṉam, *n.* <இதைப் புனம். Plot of land newly cultivated. See இதைப்புனம். (யாழ். அக.)

விதைப்பை vitai-p-pai, *n.* <விதை[1]+பை[4]. Scrotum; பீசப்பை. *Loc.*

விதைமணி vitai-maṇi, *n.* <id.+. Seed-grain; விதைப்பதற்குரிய தானியம்.

விதையடி-த்தல் vitai-y-aṭi-, *v. tr.* <id. +. To castrate; to emasculate; மாடு முதலிய வற்றின் பீசப்பையிலுள்ள விதையை நசுக்கி இல்லா மற் செய்தல்.

விதையம் vitaiyam, *n.* <*Vidēha*. See விதேகம், 3. வெள்ளநீர்ப் படப்பை விதையம் வந் தடைந்தே (சீவக. 2109).

விதையெடு-த்தல் vitai-y-eṭu-, v. tr. <விதை¹+. See விதையடி-.

விதைவீக்கம் vitai-vīkkam, n. <id.+. Swelling of the testicle, orchitis; பீசம்வீங்குகை. (M. L.)

விந்தம்¹ vintam, n. <vindhya. 1. See விந்தியம். விந்த வனமெனா வேவவும் (தக்கயாகப். 62). 2. Mountain; மலை. (நாமதீப. 513.)

விந்தம்² vintam, n. <kuruvinda. A kind of ruby. See குருவிந்தம், 1. பதுமமு நீலமும விந்தமும் படிதமும் (சிலப. 14, 186).

விந்தம்³ vintam, n. <aravinda Lotus; தாமரை. விந்தமாபபிணைடி முலலை . . நீலமகோல வற்கு (நாமதீப. 59).

விந்தம்⁴ vintam, n. prob. bṛnda. 1. The number 64,00,00,000; அறுபத்துநான்கு கோடி கொண்ட ஒரு பேரெண். (பிங்.) 2. Jungle; காடு. (பிங்.)

விந்தம்⁵ vintam, n. 1. A mineral poison; குதிரைப்பற்பாஷாணம். (யாழ். அக.) 2. Purified camphor. See பச்சைக்கற்பூரம். (அரு. அக.)

விந்தம்⁶ vintam, n. prob. bṛndāraka. The great; மேலோர். (அரு. நி.)

விந்தம்⁷ vintam, n. <vindhyā. Roselle. See செம்புளிச்சை, 2. (பிங்.)

விந்தமடட்டோன் vintam-aṭṭōṉ, n. <விந்தம்¹+அடு²-. Agastya, as one who subdued the Vindhyas; அகத்தியன். (நாமதீப. 121.)

விந்தரம் vintaram, n. A mineral poison. See கற்கடகபாஷாணம். (யாழ். அக.)

விந்தன் vintaṉ, n. prob. கோவிந்தன். Shepherd; இடையன். (நாமதீப. 158.)

விந்தாக்கினி vintākkiṉi, n. <விந்து+அக்கினி. See விந்துத்தீ. (யாழ். அக.)

விந்தாடவி vintāṭavi, n. <vindhyāṭavī. The forest region adjoining the Vindhyas; விந்தமலைக்காடு. (தக்கயாகப். 62, உரை.)

விந்தாரற்கல் vintāraṟ-kal, n. <விந்தம்²+ஆர்¹-+. A kind of red stone, being a variety of kuruvintam; செந்நிறமுள்ள ஒருவகைக் குருவிந்தக் கல். (யாழ். அக.)

விந்தியகிரி vintiya-kiri, n. <Vindhya-giri. See விந்தியம்.

விந்தியம் vintiyam, n. <Vindhya. The range of hills separating the Hindusthan from the Deccan, one of aṣṭa-kula-parvatam, q.v.; அஷ்டகுலபர்வதத்துள் இந்துஸ்தானத்திற்கும் தக்கண நாட்டுக்கும் இடையிலுள்ள நீண்ட மலைத்தொடர். (பிங்.)

விந்தியவாசனி vintiyavācaṉi, n. <விந்தியம்+வாசி⁴-. Arabian costum. See கோஷ்டம்¹, 2. (மலை.)

விந்தியவாசி¹ vintiyavāci, n. See விந்திய வாசினி. (யாழ். அக.)

விந்தியவாசி² vintiyavāci, n. See விந்திய வாசனி. (யாழ். அக.)

விந்தியவாசினி vintiyavāciṉi, n. <vindhya-vāsinī. Durgā; துர்க்கை. (யாழ். அக.)

விந்து vintu, n. <vindu. 1. Dot, point; புள்ளி. (உரி. நி.) 2. Drop, globule; துளி. 3. Drop of water, as a liquid measure; நீர்த்துளி யளவு. (இலக். அக.) 4. Semen, sperm; சுக்கி லம். (நாமதீப. 601.) 5. Mercury; பாதரசம். (நாமதீப. 395.) 6. A flaw in diamond; வயிரக்குற்றங் களுள் ஒன்று. (சிலப. 14, 180, உரை.) 7. Mark; குறி. (யாழ். அக.) 8. Tilka; நெற்றிப்பொட்டு. (யாழ். அக.) 9. Sharp edge of grains of paddy; நென் மூக்கு. பலாதன் வாலிய விந்துவு மருவாதோரே (ஞானா. 1, 3) 10. The middle portion of the forehead between the eye-brows; புருவமத்தி. (யாழ். அக.) 11. Circle; வட்டம். (நாமதீப. 766.) 12. (Śaiva.) Sphere of knowledge presided over by Śiva's ñāṉa-śakti. See சிவதத்துவம். அலைரைம்பூத மூாதா விந்துவி னோதா வியைந்த (ஞானா. 56, 19). 13. (Śaiva.) Pure Māya; சுத்தமாயை. விந்துவின் மாயையாகி (சி. சி. 1, 19). 14. (Śaiva.) A mystic centre in the body, one of cōḷaca-kalai, q.v.; சோடசகலையுள் ஒன்று. விடகலைமேல விநது (பிரசாதமாலை, 1).

விந்துசம் vintucam, n. A medicinal plant. See தாளி³, 3. (சங். அக.)

விந்துசலை vintucalai, n. <vindu+cala. See விந்துஸ்கலிதம். Loc.

விந்துஞானம் vintu-ñāṉam, n. <விந்து+. (Śaiva.) Differentiated knowledge resulting from the four kinds of vākku which arise from cutta-māyai; சுத்தமாயாகாரியமான நால்வகை வாக்குக்களா லுண்டாம் சவிகற்பஞானம். மூவகை யணுக்களுக்கு விந்துஞான மேவின நிலையாகில் (சி. சி. 1, 26).

விந்துடைவு vintuṭaivu, n. <id.+உடை¹-. See விந்துஸ்கலிதம். (M. L.)

விந்துத்தீ vintu-t-tī, n. <id.+தீ⁴. Sexual heat. See காமத்தீ. (குடா.)

விந்துதத்துவம் vintu-tattuvam, n. <id.+. (Śaiva.) A category. See சத்திதத்து வம். (சி. போ. பா. 2, 2, பக். 139. புதுப்.)

விந்துநஷ்டம் vintu-naṣṭam, *n.* <id.+. See விந்துஸ்கலிதம். (M. L.)

விந்துநாதம் vintu-nātam, *n.* <id.+ *nāda*. Semen; வீரியம். (*நாமதீப.* 601.)

விந்துநீர் vintu-nīr, *n.* <id.+*நீர்*[1]. See விந்துநாதம். *Loc.*

விந்துவழி vintu-vaḻi, *adv.* <id.+. By birth; பிறவிமுறையால். (W.)

விந்துவனல் vintu-v-aṉal, *n.* <id.+ *அனல்*. See விந்துத்தீ (*திவா.*)

விந்துவியூகம் vintu-viyūkam, *n.* <id.+. A category of things, one of *nava-viyūkam*, q.v.; நவவியூகத்து ளொன்று. (*சௌந்த.* 1, *உரை.*)

விந்துஸ்கலிதம் vintu-skalitam, *n.* <id. +. Spermatorrhoea; இந்திரிய நெகிழ்ச்சி. (M. L.)

விந்தூகம் vintūkam, *n.* Vermilion; சாதிலிங்கம். (*சங். அக.*)

விந்தை[1] vintai, *n.* <*vidyā*. 1. Learning, scholarship; கல்வி. 2. The art of magic; சாலவித்தை. 3. Durgā; துர்க்கை. (*திவா.*) 4. Goddess of Valour; வீரலட்சுமி. *விந்தை நெடுமெலை நோக்க* (*இரகு. திக்குவி.* 147) 5. Pārvatī; பார்வதி. (*நாமதீப.* 22.) 6. Lakṣmī; இலக்குமி. *விந்தை கேள்வனும் விரிஞ்சனும* (*உபதேசகா. சிவவிரத.* 300). 7. Beauty; அழகு. (*நாமதீப.* 791.) 8. Wonder, astonishment; ஆச்சரியம். (*அரு. நி.*) 9. Humour; வேடிக்கை. *அவன் விந்தைவிந்தையாய்ப் பேசுகிறான்.*

விந்தை[2] vintai, *n.* <*Vindhya*. See விந்தியம். *விந்தையெனும விண்டோய் நாகம்* (*கம்பரா. அகத்.* 39).

விந்தை[3] vintai, *n.* Husband's brother's wife; ஓரகத்தி. (*யாழ். அக.*)

விந்தைக்காரன் vintai-k-kāraṉ, *n.* <*விந்தை*[1]+*காரன்*[1]. Artist; சிற்பி. (W.)

விந்தைமகள் vintai-makaḷ, *n.* <id.+. Lakṣmī; இலக்குமி. (*நாமதீப.* 53.)

விந்தையடி-த்தல் vintai-y-aṭi-, *v. intr.* <id.+. To work wonders; அருஞ்செயல் செய்தல். (W.)

விந்தையம் vintaiyam, *n.* False peacock's foot tree. See மயிலடிக்குருந்து. (*மலை.*)

விந்நியாசம் vinniyācam, *n.* <*vi-nyāsa*. 1. Stringing, as of flowers; பூ முதலியன தொடுக்கை. (இலக். *அக.*) 2. Establishing; தாபிக்கை. (இலக். *அக.*) 3. Cleverness of speech; சாமர்த்தியப்பேச்சு. *Loc.* 4. Elaboration, as of a tune; விஸ்தரிக்கை. *Loc.* 5. Humour, ridicule; வேடிக்கை. *Loc.*

விநதி vinati, *n.* <*vi-nati*. Obeisance; வணக்கம். (*யாழ். அக.*)

விநயசம்பத்து vinaya-campattu, *n.* <*vinaya*+. Virtue of humility, as a valuable possession; பணிவு.

விநயசம்பன்னதை vinaya-campaṉṉa-tai, *n.* <id.+*sampannatā*. (Jaina.) Eagerness in showing courtesy and reverence to preceptors, etc.; குருக்கள் முதலாயினோரை உபசரிப்பதில் ஆதுரமுடைமை. (*சீவக.* 3133, *கீழ்க்குறிப்பு.*)

விநயபிடகம் vinaya-piṭakam, *n.* <*vinaya* +*piṭaka*. (Buddh.) A collection of maxims on discipline. See வினயபிடகம்.

விநயம் vinayam, *n.* <*vi-naya*. 1. Obeisance; reverence; வணக்கம். 2. Good breeding, propriety of conduct, decorum; மரியாதை. (*யாழ். அக.*) 3. Pleasant speech; நயமொழி. *விநயம புகன்ற . . . வஞ்சகன்* (*ஞானா.*). 4. Humility, modesty; பணிவு. 5. Conventional expression of humility, by way of preface in a literary work or in addressing an assembly; அவையடக்கம். *அவையடக்க மென்னும விநயமும* (*பி. வி.* 50). 6. A kind of song. See தேவபாணி. (*சிலப்.* 8, 25-26, *உரை.*) 7. Order, command; கட்டளை. (*யாழ். அக.*) 8. Means; உபாயம். *விநயம் வேறிலான்* (*கந்தபு. குமாரபுரி.* 36). 9. Good conduct; நன்னடை. (*யாழ். அக.*) 10. Charity; தருமம். (*யாழ். அக.*)

விநாசகம் vinācakam, *n.* <*vi-nāśa-ka*. See விநாசம், 1. (*யாழ். அக.*)

விநாசகாலம் vināca-kālam, *n.* <*vināśa-kāla*. Period of imminent loss or destruction; அழிதற்காலம்.

விநாசம் vinācam, *n.* <*vi-nāśa*. 1. Utter loss, annihilation, ruin, destruction; அழிவு. *வாழ்வும விநாச முற* (*திருப்பு.* 186). 2. Killing, murder; கொலை. (*யாழ். அக.*)

விநாசன் vinācaṉ, *n.* <விநாசம். Murderer; கொலைஞன். (*யாழ். அக.*)

விநாசனம் vinācaṉam, *n.* <*vi-nāśana*. 1. See விநாசம், 1. (இலக். *அக.*) 2. See விநாசம், 2. (*யாழ். அக.*)

விநாடி vināṭi, *n.* <*vi-nāḍi*. See விநாடிகை.

விநாடிகை vināṭikai, *n.* <*vi-nāḍikā*. Minute portion of time=1/60th *nāṭi*=24 seconds; ஒரு காலநுட்பம். (*யாழ். அக.*)

விநாயகசதுர்த்தி vināyaka-caturtti, *n.* <*Vināyaka*+. The fourth *titi* of the bright half of the lunar month of Cirāvaṇam, as sacred to Gaṇēśa; விநாயகர்க்குத் திருவிழாச் செய்யுஞ் சிராவண மாதத்துச் சுக்கிலபட்சத்துச் சதுர்த்தி. *விநாயக சதுர்த்தியாந் தினத்தில்* (உபதேசகா. சிவவிரத. 338).

விநாயகசவுத்தி vināyaka-cavutti, *n.* <id. + T. *cauti*. See விநாயகசதுர்த்தி. *Loc.*

விநாயகசஷ்டி vināyaka-caṣṭi, *n.* <id. +. The sixth *titi* of the bright half of the lunar month of Mārkkaciram, when the special worship of Gaṇēśa terminates; விநாயக பூஜை பூர்த்தியாகுந் திதியான மார்க்கசிர மாதத்துச் சுக்கில பட்சத்துச் சஷ்டி. (யாழ். அக.)

விநாயகநவராத்திரி vināyaka-nava-rāttiri, *n.* <id. +. Worship of Gaṇēśa for nine consecutive days from the *vināyaka-caturtti*; விநாயகசதுர்த்தியிலிருந்து தொடர்ச்சியாக ஒன்பது நாள் விநாயகக்கடவுளைக் கொண்டாடும் திருவிழா. (J.)

விநாயகபுராணம் vināyaka-purāṇam, *n.* <id. +. A Purāṇa on Gaṇēśa, by Kacciyappa-munivar; விநாயகக்கடவுள்மீது கச்சியப்பமுனிவரியற்றிய ஒரு புராணம்.

விநாயகன் vināyakaṉ, *n.* <*Vināyaka*. 1. Gaṇēśa, as the remover of obstacles; கணபதி. (பிங்.) 2. Arhat; அருகன். (பிங்.) 3. The Buddha; புத்தன். (யாழ். அக.) 4. Garuda; கருடன். (இலக். அக.) 5. Spiritual preceptor; குரு. (யாழ். அக.)

விநாழி vināḻi, *n.* <*vi-nāḍi*. See விநாடிகை.

விநாழிகை vināḻikai, *n.* See விநாடிகை. (இலக். அக.)

விநிகதம் vinikatam, *n.* <*vi-ni-hata*. Ill omen, portent; உற்பாதம். (யாழ். அக.)

விநிமயம் vinimayam, *n.* <*vi-nimaya*. 1. Exchange; பண்டமாற்று. (இலக். அக.) 2. Pledge, pawn; அடகு. (யாழ். அக.)

விநியோகம் viniyōkam, *n.* <*vi-niyōga*. 1. Employment, use; உபயோகம். (தக்கயாகப். 36, உரை.) 2. Distribution; பிரித்து வழங்குகை. 3. Distribution of food-offerings in a temple; கடவுளின் பிரசாதத்தைப் பலர்க்கும் வழங்குகை. 4. Expenditure; செலவு. *Loc.*

விநீதன் vinītaṉ, *n.* <*vi-nīta*. (W.) 1. Humble, modest person; விநயமுள்ளவன். 2. One who has been chastised or punished; தண்டிக்கப்பட்டவன்.

விநோதம் vinōtam, *n.* <*vinōda*. 1. Pastime, play, sport; விளையாட்டு. 2. Pleasure, joy; மனமகிழ்ச்சி. (யாழ். அக.) 3. Wonder, surprise; வியப்பு. (இலக். அக.) 4. Beauty; handsomeness; அழகு. (W.)

விநோதரசமஞ்சரி vinōta-raca-mañcari, *n.* <id. + *rasa*+. The collection of anecdotes, by Vīrācāmi-c-ceṭṭiyar, 19th C.; 19-ஆம் நூற்றாண்டில் வீராசாமிச்செட்டியார் இயற்றிய வசன நூல்.

விநோதன் vinōtaṉ, *n.* <விநோதம். One who diverts himself, as with a hobby; பொழுதுபோக்குபவன். *அருங்கலை விநோதன்* (நன். சிறப்புப்பாயி.).

விநோதி vinōti, *n.* <id. See விநோதன். (W.)

விப்பிரகாரம் vippirakāram, *n.* <*vi-pra-kāra*. (யாழ். அக.) 1. Opposition; எதிரிடை. 2. Evil; தீங்கு. 3. Insult, abuse; நிந்தை. 4. Harm, injury; அபகாரம். (இலக். அக.)

விப்பிரகிருதி vippirakiruti, *n.* <*vi-prakṛti*. (யாழ். அக.) 1. Insult, abuse; நிந்தை. 2. Retort; எதிர்க்கூற்று.

விப்பிரகீர்ணம் vippirakīrṇam, *n.* <*vi-pra-kīrṇa*. (Nāṭya.) One of thirty kinds of *nirutta-k-kai*, q.v.; நிருத்தக்கை முப்பதனுள் ஒன்று. (சிலப். 3, 12, பக். 81, அடிக்குறிப்பு.)

விப்பிரதிபத்தி vippiratipatti, *n.* <*vi-prati-patti*. Divergence; difference; incompatibility; முரண்பாடு. *கௌரவமின்மை அப்பிரதிபத்தி விப்பிரதிபத்தி அன்னியதாபிரதிபத்தி காரணமைக்கும் எனக* (பி. வி. 21, உரை). 2. Perplexity, mental confusion; மனக்குழப்பம்.

விப்பிரநாராயணன் vippira-nārāyaṇaṉ, *n.* <*vipra*+. A Vaiṣṇava Saint. See தொண்டரடிப்பொடி. (சங். அக.)

விப்பிரப்பிரியம் vippira-p-piriyam, *n.* <*vipra-priya*. Palas tree. See புரசு[3]. (சங். அக.)

விப்பிரமம் vippiramam, *n.* <*vi-bhrama*. 1. Whirling round; சுழற்சி. *Loc.* 2. Giddiness; மயக்கம். 3. Confusion; flurry; perturbation; மனக்குழப்பம். (இலக். அக.) 4. Mistake, blunder; குற்றம். (யாழ். அக.) 5. Beauty; அழகு. (யாழ். அக.) 6. Amorous gesture or action; dalliance of lovers; சிருங்கார லீலை. (W.) 7. Love quarrel; sulks; காமப்பிணக்கு. (W.)

விப்பிரமை vippiramai, *n.* <*vi-bhramā*. See விப்பிரமம், 6. *விப்பிரமை யென்றொரு மென்கொடி* (பிரபோத. 15, 1).

விப்பிரயோகம் vippira-yōkam, *n.* <*vi-prayōga.* 1. Separation of lovers; காதலரின் பிரிவு. 2 Sighing and lamentation, one of *pañca-pāṇā-vastai*, q v.; பஞ்சபாணாவஸ்தைபுள் ஒன்றாகிய வெய்துயிர்த் திரங்குதை. (பிங.)

விப்பிரலம்பம் vippiralampam, *n.* <*vipra-lambha.* 1. Separation of lovers; காதலர் பிரிவு. 2. Deception, deceit; வஞ்சகம். *ஆசாரியா வாக்கியங்களை விபபிரலமப வாக்கியங்களாக்கி* (சிவசம. 68). 3. Quarrel; சண்டை. (யாழ். அக.) 4. cf. *vilamba.* Delay; தாமசம். *உபயவாதிகளும் ஒபபுக் கொணட பிறகு ராஜிவிஷயத்தில் விபபிரலம்ப மென்ன?*

விப்பிரலாபம் vippiralāpam, *n.* <*vi-pra-lāpa.* (யாழ். அக.) 1. Idle, useless talk; பயனற்ற பேச்சு. 2. Discussion, debate; dispute; வாக்குவாதம்.

விப்பிரவாசம் vippiravācam, *n.* <*vi-pra-vāsa.* Residence in a foreign country; பரதேசவாசம். (யாழ். அக.)

விப்பிரன் vippiran̠, *n.* <*vipra.* Brahman; பிராமணன். *திருவளர விபபிரசிகாமணி* (பதிறு. ஆளுடை. திருக்கலம. 6).

விப்பிராந்தி vippirānti, *n.* <*vi-bhrānti.* (யாழ். அக.) 1. Whirling; சுழலுகை. 2. Perplexity; confusion; கலக்கம்.

விப்பிரியம் vippiriyam, *n.* <*vi-priya.* That which is not agreeable or desirable; விரும்பத்தகாதது. (இலக். அக.)

விப்பிலவம் vippilavam, *n.* <*vi-plava.* (யாழ். அக.) 1. Distress; உபத்திரவம். 2. Affray, scuffle; கலகம். 3. Unjust fight; அநியாயப் போர். 4. Evil, calamity, disaster; பொல்லாங்கு.

விப்புருதி vippuruti, *n.* <*vidradhi.* Abscess, boil; புண். *களமாலை விப்புருதி வரளருலே* (திருப்பு. 627).

விப்புருதிக்கட்டி vippuruti-k-kaṭṭi, *n.* <விப்புருதி+. Moving abscess, a disease of children; குழந்தைகட்கு வரும் ஒருவகைப் புண் கட்டி.

விப்புருதிநாயகம் vippuruti-nāyakam, *n.* <id.+. Indian winter cherry. See அமுக்கிரா. (மலை.)

விப்ரன் vipran̠, *n.* See விப்பிரன். *கிரிசால விப்ர சமூக வேதன* (திருப்பு. 1126).

விபக்கம் vipakkam, *n.* <*vi-pakṣa.* 1. opposite side or party; எதிர்க்கட்சி. (இலக். அக.) 2. Opposite view; எதிரிடையான கொள்கை. 3. (Log.) Instance in which the major term is not found, as lake, where fire, the major term, is not found; அநுமானவுறுப்புள் துணிபொருளில்லா விடம். *சபக்கததுணடாதலும விபக்கத்தின்றியே விடுதலும்* (மணி. 29, 123-4).

விபக்கன் vipakkan̠, *n.* <*vi-pakṣa.* Enemy; பகைவன். (சங். அக.)

விபக்தகுடும்பம் vipakta-kuṭumpam, *n.* <*vi-bhakta*+. Divided family, among the Hindus, opp. to *avipakta-kuṭumpam;* பொதுச்சொத்து பாகிக்கப்பட்ட குடும்பம்

விபக்தம் vipaktam, *n.* <*vi-bhakta.* 1. See விபாகம், 2. 2. Divided state of a Hindu family; பாகிக்கப்பட்ட குடும்பநிலை.

விபகரி-த்தல் vipakari-, 11 *v. intr.* <*vyavahṛ.* To discuss; வழக்குச்சொல்லுதல். (யாழ். அக.)

விபகலிதம் vipa-kalitam, *n.* <*vyava-kalita.* (Arith.) Subtraction, one of *aṭṭa-kaṇitam*, q.v.; அட்டகணிதத்து ளொன்றாகிய கழித்தல். (திவா.)

விபகாரம் vipakāram, *n.* See விவகாரம். (சங். அக.)

விபச்சித்து vipaccittu, *n.* <*vi-paścit.* 1. Learned man; வித்துவான். (இலக். அக.) 2. A Buddha; புத்தருள் ஒருவர். (மணி. 30, 14, குறிப்பு.)

விபசாயம் vipacāyam, *n.* <*vyavasāya.* Agriculture; விவசாயத்தொழில். (நாமதீப. 741.)

விபசாரக்கள்ளன் vipacāra-k-kaḷḷan̠, *n.* <விபசாரம்+. See விபசாரன். (W.)

விபசாரம் vipacāram, *n.* <*vyabhicāra.* Adultery; சோரம்போகை.

விபசாரன் vipacāran̠, *n.* <விபசாரம். Adulterer; சோரம்போவான். (W.)

விபசாரி vipacāri, *n.* Fem. of விபசாரன். Adulteress; சோரம்போவாள். *இடபத்தின் மாறுது விபசாரியாம்* (அறப. சத. 70).

விபஞ்சி vipañci, *n.* <*vipañcī.* 1. See விபஞ்சிகை. *பாலை விபஞ்சி பயிலுமொழி* (பெரியபு. சேரமான். 2). 2. (Mus.) A secondary melody-type of the *kuriñci* class; குறிஞ்சியாழ்த்திறத் தொன்று. (பிங.)

விபஞ்சிகம் vipañcikam, *n.* See விபஞ்சிகை. (யாழ். அக.)

விபஞ்சிகை vipañcikai, *n.* <*vipañcikā.* A kind of lute; வீணைவகை. (பாரத. ஒழிபி. 15.)

விபட்சம் vipaṭcam, n. <vi-pakṣa. See விபக்கம். (சி. சி. அளவை, 9.)

விபட்சன் vipaṭcaṉ, n. <vi-pakṣa. (யாழ். அக.) 1. Opponent, as in a debate; வாதத்தில் எதிரியாயுள்ளவன். 2. Enemy; சத்துரு.

விபண்ணகம் vipaṇṇakam, n. prob. tri-parṇaka. Palas tree. See புரசு³. (மலை.)

விபணம் vipaṇam, n. <vi-paṇa. Price, cost; விலை. (யாழ். அக.)

விபணி vipaṇi, n. <vipaṇi. Shop; market, bazaar; கடை. (யாழ். அக.)

விபத்தம் vipattam, n. Strychnine tree. See எட்டி¹. (சங். அக.)

விபத்தன் vipattaṉ, n. <vi-bhakta. One who is divided from one's family; குடும்பத்தி னின்று பிரிந்தவன்.

விபத்தி¹ vipatti, n. <vi-bhakti. 1. Change; வேறுபாடு. விபத்தியில ஞானபடலத்து (திருப்பு. 146). 2. (Gram.) Case; வேற்றுமை. எழுவாய் விபத்தி திரிபில் பெயர் (பி. வி. 8). 3. Suffix of declension; வேற்றுமையுருபு. விபத்தி வேற்றுமை யுருபென விளம்புவர் (பி. வி. 8, உரை).

விபத்தி² vipatti, n. <vi-patti. 1. Misfortune; துர்ப்பாக்கியம். (யாழ். அக.) 2. Poverty; தரித்திரம். (யாழ். அக.) 3. Agony; வேதனை. (யாழ். அக.) 4. Danger; ஆபத்து. (இலக். அக.) 5. Death; மரணம். (யாழ். அக.) 6. Destruction; அழிவு. (இலக். அக.)

விபத்து vipattu, n. <vi-pad. 1. See விபத்தி², 1, 3, 5. (யாழ். அக.) 2. See விபத்தி², 2. Loc. 3. See விபத்தி², 4. சிலபகுழிதனில விழும விபதை நீக்கி (திருப்பு. 882). 4. See விபத்தி², 6. (இலக். அக.)

விபத்துக்காலம் vipattu-k-kālam, n. <விபத்து+. 1. See விபரீதகாலம். 2. Time of scarcity; பஞ்சகாலம். (W.)

விபரம் viparam, n. <vi-vara. See விவரம். Loc.

விபரியயம் vipariyayam, n. <vi-paryaya. 1. Mistaking one thing for another; erroneous identification; திரிபுணர்வு. (சங். அக.) 2. (Gram.) Transposition of words, in a compound; தொடர்மொழியுள் பதங்கள் முன்பின்னாக வருவது. (பி. வி. 27.)

விபரியாசம் vipariyācam, n. <vi-paryāsa. (யாழ். அக.) 1. Opposition; contrariety; எதிரிடை. 2. Change; வேறுபாடு.

விபரீதகாலம் viparīta-kālam, n. <vi-parīta+. Adverse times; கேடு விளைக்குங் காலம்.

விபரீதசுரம் viparīta-curam, n. <id.+ jvara. Fever which becomes malignant on account of non-observance of diet regulation; அபத்தியத்தாற் கடுமையாகுஞ் சுரநோய். (சீவரட். 34.)

விபரீதஞானம் viparīta-ñāṉam, n. <id. +. Perverted, erroneous knowledge; திரிபுணர்ச்சி.

விபரீதபுத்தி viparīta-putti, n. <id.+ buddhi. 1. Perverted intellect; திரிவுபட்ட புத்தி. 2. See விபரீதஞானம்.

விபரீதம் viparītam, n. <vi-parīta. 1. Discordance; contrariety; perversity; மாறுபாடு. (பிங்.) விபரீதம் புணாதநவிட்டௌ (கம்பரா. மாயாசன. 2). 2. Unfavourableness; பிரதிகூலம். நின் செய்ய வாயிருங் கனியுங் கண்களும் விபரீத மின்நாள (திவ். திருவாய். 6, 2, 3). (இலக். அக.) 3. Strangeness, uncommonness; அதிசயம். (திவா.) 4. See விபரீதஞானம். சிவபாவமுணவெனல் விபரீதமாம் (வேதா. சூ. 129). 5. cf. a-parimita. Excessiveness; மிகுதி. (அரு. நி.)

விபரீதலட்சணை viparīta-laṭcaṇai, n. <id.+lakṣaṇā. Irony, using language hinting at a meaning contrary to the literal sense. See எதிர்மறையிலக்கணை. செவ்வாய்க்கிழமையை மங்கள வாரமென்னுமா போலே விபரீதலட்சணை (திவ். பெரி யாழ். 5. 4, 7, வ்யா.).

விபரீதவுவமை viparīta-v-uvamai, n. <id. +. (Rhet.) Inverse simile, in which the usual upamāṉam is given as upamēyam and vice versa; தோன்றுநோட்டுவரும் உவமானத்தை உவமேயமாக்கி உவமேயத்தை உவமானமாக்கிச் சொல்லும் அணிவகை. (தண்டி. 30.)

விபரீதவெதிரேகம் viparīta-vetirēkam, <viparīta-vyatirēka. (Log.) A fallacious instance in which the relation of pervasion between the non-existence of the major term and that of the middle term is stated in the inverse order, one of five vaitaṉmiya-tiṭṭānta-p-pōli, q.v.; வைதன்மியதிட்டாந்தப்போலி ஐந்தனுள் வெதிரேகவாக்கியத்தை மாறுபடச் சொல்லுகை. (மணி. 29, 460.) (அனுமா. 47.)

விபரீதார்த்தம் viparītārttam, n. <viparīta +artha. Perverse or unnatural sense or meaning; நேர்மையின்றி மாறுபாடான பொருள். (W.)

விபரீதான்னுவயம் viparītāṉṉuvayam, n. <viparītānvaya. (Log.) A fallacious instance in which the relation of pervasion between

the major and middle terms is stated in the inverse order, one of five *cātaṉmiya-tiṭṭānta-v-āpācam*, q.v., சாதன்மியதிட்டாந்தவாபாசம் ஐந்தனுள் திட்டாந்தவுருப்பாகிய அன்னுவயவாக்கியந்தை முறைபிறழக் கூறுவது. (*மணி.* 29, 339.) (*அனுமா.* 43.)

விபலம் vipalam, *n.* <*vi-phala*. Fruitlessness, uselessness, unprofitableness; பயனின்மை. *எனைய வெல்லாம விபலம்.*

விபலீகரணம் vipalīkaraṇam, *n.* <*viphalī-karaṇa*. (*யாழ். அக.*) 1. Rendering useless; frustrating; பயனில்லாமற் செய்கை. 2. Hindering, opposing; தடுக்கை.

விபவ vipava, *n.* <*Vibhava*. The second year of the Jupiter cycle; ஆண்டு அறுபதனுள் இரண்டாவது.

விபவம் vipavam, *n.* <*vibhava*. 1. Greatness, dignity, majesty; பெருமை. *இராசவிபவ மெலலாம பெறுவா* (*தக்கயாகப.* 179, *உரை*). 2. Wealth, property, fortune; செல்வம். (*திவா.*) 3. Happiness, prosperity; வாழ்வு. *விபவமுடன் வீற் றிருந்தான்* (*கந்தபு. கந்தவி.* 123). (*சூடா.*) 4. Salvation; மோட்சம். (*இலக. அக.*) 5. Manifestation of Viṣṇu in the ten primary and other secondary avatāras, one of five *tiru-māl-nilai*, q.v.; திருமால்நிலை ஐந்தனுள் மச்ச கூர்மாதி அவதார நிலை. (*அஷ்டாதச. தத்துவத.* 3, 49.)

விபவருக்கம் vipavarukkam, *n.* <*apa-varga*. See விபவம், 4. (*நாமதீப.* 477.)

விபவாவதாரம் vipavāvatāram, *n.* <*vibhavāvatāra*. See விபவம், 5. *அதிஸுந்தராய விபவாவதாரமாக ஸேவை ஸாதிக்க* (*கோயிலொ.* 4).

விபற்சு viparcu, *n.* <*Bībhatsu*. Arjuna; அருச்சுனன். (*திவா.*)

விபன்னன் vipaṉṉaṉ, *n.* <*vi-panna*. One who has suffered in adversity; துன்பப்பட்டவன். (*யாழ். அக.*)

விபஜி-த்தல் vipaji-, *11 v. tr.* <*vi-bhaj*. To divide; பிரித்தல். *திருவடிகளை ஆச்ரயித்தவர்களை . . . ஒரு கொத்தாகச் சாற்றி அவர்கள் கைங்கர்யங்களை விபஜித்து* (*கோயிலொ.* 46).

விபக்ஷம் vipakṣam, *n.* See விபட்சம்.

விபாகபத்திரம் vipāka-pattiram, *n.* <*vi-bhāga+patra*. Partition deed. See பாகபத்திரம்.

விபாகம் vipākam, *n.* <*vi-bhāga*. 1. Distribution, apportionment; பிரிவு. *வெவ்வேறு விபாகமாகி* (*சி. சி.* 1, 22). 2. Partition of property; apportionment of the property of a deceased person amongst his heirs; குடும்பச்சொத்தைப் பிரிக்கை. 3. Well-defined portion; வரையறை செய்த பகுதி. *யாகவிபாக முறபட வுணணலாம்* (*தக்கயாகப.* 248).

விபாகயோகம் vipāka-yōkam, *n.* <*vi-bhaga+*. Combining things usually separated, as making one aphorism out of two; பிரிந்துள்ள சூத்திரம் முதலியவற்றை ஒன்றாகக் கூட்டுகை. *யோகவிபாகம் விபாகயோகமென்னு முறைமைகள அறிந்துகொள்ள மாட்டாமையின் அவ்வாறு குழறினீர* (*சித. மரபுகண.* 11).

விபாகரன் vipākaraṉ, *n.* <*vibhā-kara*. Sun; சூரியன். *எழ்பரிததேர விபாகரன்* (*பாரத. மூன்றுநாள.* 30).

விபாங்கதாளம் vipāṅka-tāḷam, *n.* prob. *vibhanga+*. (Mus.) A variety of time-measure; தாளவகை. (*பரத. தாள.* 4.)

விபாசம் vipācam, *n.* <*vi-pāśa*. Freedom from bondage; பந்தமோசனம். (*யாழ். அக.*)

விபாடம் vipāṭam, *n.* <*vi-pāṭa*. Splitting, cleaving; பிளக்கை. (*தனிப்பா.* 1, 309, 1.)

விபாடனம் vipāṭaṉam, *n.* <*vi-pāṭana*. See விபாடம்.

விபாடை vipāṭai, *n.* <*vibhāṣā* 1. Alternative, option; விகற்பம். 2. Counter proposition; மாறுகோளுரை. *மாறுகோளுரை யெனினும் விபாடை யெனினும ஒக்கும* (*சி. போ. பா. அவை.* 39, *புதுப.*).

விபாண்டகன் vipāṇṭakaṉ, *n.* <*vibhāṇḍa-ka*. A Ṛṣi; ஒரு முனிவன். *காசிப னருளு மைநதன் விபாண்டகன்* (*கமபரா. திருவவ.* 32).

விபாதம் vipātam, *n.* <*vi-bhāta*. Dawn, day-break; உதயகாலம். (W.)

விபாவசன் vipāvacaṉ, *n.* See விபாவசு. (W.)

விபாவசு vipāvacu, *n.* <*vibhāvasu*. Sun; சூரியன். (*யாழ். அக.*)

விபாவரி vipāvari, *n.* <*vibhāvarī*. 1. Night; இராத்திரி. (*உரி. நி.*) 2. Pārvatī; பார்வதி. (*கூர்மபு. திருக்கலியாண.* 23.)

விபாவனம்¹ vipāvaṉam, *n.* <*vi-bhāvana*. Investigation; ஆராய்ச்சி. (*யாழ். அக.*)

விபாவனம்² vipāvaṉam, *n.* <*vi-pāvana*. Impurity; புனிதமின்மை. (*சங். அக.*)

விபாவனை vipāvaṉai, n. <vi-bhāvanā. 1. (Rhet.) A figure of speech in which the effects are represented as taking place, though their usual causes are absent; பிரசித்தமான காரணமின்றியே காரியம் பிறந்ததாகச் சொல்லும் அணிவகை. (தண்டி. 50.) 2. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 22.)

விபினம் vipiṉam, n. <vipina. Wilderness, jungle, forest; காடு. அருந்தவ விபினம (பாரத. குருகுல. 7).

விபீடணன் vipīṭaṇaṉ, n. See விபீஷணன். மின் னியலகுபூண விபீடண நமபிக்கு (திவ். பெரியாழ். 2, 6, 9).

விபீதகம் vipītakam, n. <vibhīta-ka. Belleric myrobalan. See தான்றி[2], 1. (மலை.)

விபீதம் vipītam, n. <vibhīta. See விபீதகம். (சங். அக.)

விபீஷணன் vipīṣaṇaṉ, n. <Vibhīṣaṇa. A Rākṣasa, a younger brother of Rāvaṇa; இராவணன் தம்பியருள் ஒருவன்.

விபு vipu, n. <vibhu. 1. That which is omnipresent; எங்கும் வியாபகமுற்றது. (பி. வி. 18, உரை.) கண் . . . ஆன்மாவைபபோல விபுவல்ல (சித். மரபுகண். 10). 2. The Supreme Being; கடவுள். (W.) 3. Lord, master; எசமானன். (W.)

விபுடணன் viputaṇaṉ, n. See விபீஷணன். (யாழ். அக.)

விபுணன் vipuṇaṉ, n. cf. nipuna 1. Expert; நிபுணன். (W.) 2. Excellent man, சிறந்தோன். (யாழ். அக.) 3. Victor; வெற்றியுடையோன். (யாழ். அக.)

விபுத்தி viputti, n. <vi-buddhi. Uncommon intellect; விசேஷபுத்தி. அவா விபுததியும சத்தியும் . . . கூடின யுத்தி இது (தக்கயாகப. 304, உரை).

விபுத்துவம் viputtuvam, n. <vibhu-tva. Omnipresence; எங்கும் வியாபிக்குந்தன்மை. வஸ்துவுக்கும் விபுத்துவமின்றே (வேதா. சூ. 36, உரை).

விபுதசத்துரு viputacatturu, n. prob. dvīpi-śatru. Climbing asparagus. See தண்ணீர் விட்டான். (மலை.)

விபுதர்கந்தம் viputar-kantam, n. prob. விபுதன்+கந்தம்[2]. Purple Indian water-lily. See செங்கழநீர், 1. (தைலவ.)

விபுதன் viputaṉ, n. <vi-budha. 1. Wise, learned man; அறிஞன். (திவா.) விபுதனென்னினும் வித்தக னென்னினும் (திருக்காளத். பு. காளத்தி. 11). 2. God, celestial being; தேவன். (பிங்.) விபுத ரமுதேயபப (பாரத. வாரணா. 86). 3. Moon; சந்திரன். (யாழ். அக.)

விபுலம்[1] vipulam, n <vipula. 1. Extent, expanse; விரிவு. (திவா.) 2. Breadth, width; அகலம். (உரி. நி.) 3. Largeness, greatness; பெருமை. (திவா.) திருமகளு மருமகளு மாசிருக்கும விபுலமபோல (குற்றா. தல. நாட்டுச 18). 4. Mount Mēru; மேரு. (யாழ். அக.) 5. The Himālayas; இமயமலை. (யாழ். அக.) 6 (Jaina.) See விபுல மதி. வடுப்பட்டா விபுலமென்னு மனப் பரியதனை (மேருமந் 435).

விபுலம்[2] vipulam, n. <vipulā. See விபுலை. (பிங்.)

விபுலமதி vipula-mati, n. <vipula-mati. (Jaina.) Direct knowledge of the minds of others, their past births, etc. See மனப்பரியய ஞானம். (மேருமந். 435, உரை.)

விபுலரசம் vipula-racam, n. <vipula-rasa. Sugar-cane; கரும்பு. (மூ. அ.)

விபுலை vipulai, n. <vipulā. Earth; பூமி. (சூடா.) விபுலைவைபபெலாந் தோய்புகழ் மன்னவற் கொருமு (இரகு. திக்குவி. 128).

விபூடணம் vipūṭaṇam, n. See விபூஷணம். (யாழ். அக.)

விபூடை vipūṭai, n. <vibhūṣā. (யாழ். அக.) 1 Ornamentation; decoration; அலங்காரம். 2. Beauty; அழகு. 3. Lustre, radiance; காந்தி.

விபூதி[1] viputi, n. <vibhūti. 1. Wealth; செல்வம். (பிங்.) வேண்டும் விபூதிக ணல்கும் (திருநூற். 94). 2. The eight supernatural powers. See அஷ்டமாசித்தி. (W.) 3. Ash. See சாம்பல்[1], 1. 4. Sacred ashes of cowdung, of three kinds, viz., karpam, aṉu-karpam, upa-karpam; கற்பம் அனுகற்பம் உபகற்பம் என மூவகைப்பட்ட திருநீறு. (பிங்.)

விபூதி[2] vipūti, n. <vi-pūti. (பிங்.) 1. Rotten flesh; கெட்டுற்ற தசை 2. A hell; ஒரு நரகம். 3. Violence; கொடுமை. 4. Fault; குற்றம்.

விபூதிக்காணிக்கை vipūti-k-kāṇikkai, n. <விபூதி[1]+. An ancient tax; பழைய வரிவகை. (I. M. P. Ct. 276.)

விபூதிக்கோயில் vipūti-k-kōyil, n. <id.+. Pouch or other receptacle for sacred ashes; விபூதி வைக்கும் பாண்டம் முதலியன. Loc.

விபூதிபோடு-தல் vipūti-pōṭu-, *v. intr.* <id.+. 1. To sprinkle sacred ashes on another to the accompaniment of incantations; மந்திரித்துத் திருநீறு தூவுதல். 2. See விபூதியிடு-, 1.

விபூதிமொந்தன் vipūti-montaṉ, *n.* <id.+. A variety of plantain, bearing ash-coloured fruits; சாம்பல் வர்ணமுள்ள காய்களையுடைய மொந்தன் வாழைவகை. (G. Tp. D. I, 137.)

விபூதியிடு-தல் vipūti-y-iṭu-, *v. intr.* <id. +. 1. To smear sacred ashes; திருநீறு பூசுதல். 2. To give sacred ashes with incantations; மந்திரித்துத் திருநீறு கொடுத்தல்.

விபூதிவட்டகை vipūti-vaṭṭakai, *n.* <id. +. A vessel or cup to hold sacred ashes; திருநீறு வைக்கும் பாத்திரவகை.

விபூயம் vipūyam, *n.* <*vipūya*. Reedy sugar-cane. See முஞ்சி, 1. (யாழ். அக.)

விபூஷணம் vipūṣaṇam, *n.* <*vi-bhūṣaṇa*. Decoration, ornament; ஆபரணம்.

விபேகம் vipēkam, *n.* See விவேகம். (சங். அக.)

விபேகி vipēki, *n.* See விவேகி. (சங். அக.)

விபேதனம் vipētaṉam, *n.* <*vi-bhēdana*. Dividing, separating; பிரிக்கை. (யாழ். அக.)

விபோதம் vipōtam, *n.* <*vi-bhōda*. Intelligence, wisdom; அறிவு. (யாழ். அக.)

விம்சதி vimcati, *n.* <*vimśati*. Twenty; இருபது.

விம்பசாரகதை vimpacāra-katai, *n.* <விம்பசாரன்+. A Buddhist poem on king Bimbasāra of Magadha, in Tamil; மகத வேந்தனை பிம்பசாரனைப்பற்றியச் செய்யுணடையிலுள்ள ஒரு தமிழ்ப் பௌத்தநூல். (மணி. 30, 9, கீழ்க் குறிப்பு.)

விம்பசாரன் vimpacāraṉ, *n.* <*Bimbasāra*. A king of Maghada, a contemporary and follower of the Buddha, who lived in the 6th Cent. B. C.; கி. மு. ஆறுநூற்றண்டில் மகத தேசத்தை யாண்டவனும் கௌதமபுத்தரிடத்து உபதேசம் பெற்றவனுமான ஓரரசன்.

விம்படம் vimpaṭam, *n.* <*vimbaṭa*. Mustard; கடுகு. (மலை.)

விம்பப்பதிவிம்பநியாயம் vimpa-p-pativimpa-niyāyam, *n.* <*bimba*+*prati-bimba* +. The *nyāya* of an original and its multifarious images, as in a mirror; கண்ணாடி முதலியவற்றில் ஒன்றன் வடிவம் பலதிறப்பட்டுக் காணப்படுதல் போன்ற நியாயநெறி. விம்பப்பதிவிம்பநியாயத் தால . . . எண்ணிறந்த போகவிளைவு கூடுதல் (வேதா. சூ. 136).

விம்பப்பிரதிவிம்பபாவம் vimpa-p-pirativimpa-pāvam, *n.* <id.+id.+*bhāva*. (Rhet.) State of two things being different and yet the same, as a thing and its reflection in a mirror; ஒரு உருவமும் அதன் பிரதிபிம்பமும்போல வேற்றுமைப்பட்டிருந்தும் ஒன்றாயிருக்குந் தன்மை. (அணியி. 18, பக். 13.)

விம்பம் vimpam, *n.* <*bimba*. 1. Disc, as of the sun, moon, etc.; வட்டம். தார்மார்பமு முகவிம்பமும் (தக்கயாகப. 10). 2. Form, shape, figure; வடிவம். (W.) 3. Image, idol; விக்கிரகம். கடவுளின விம்பமும் வெகுளியிற் பிடுங்குவார் (திருக் காளத். பு. யுகதரும. 16). 4. Shadow, reflection; பிரதிபிம்பம். தூவுபனி நீர்விம்ப வனுமிதா காசம் (வேதா. சூ. 33). 5. Body; உடல். (நாமதீப. 565.) 6. Light, splendour; ஒளி. (அரு. நி.) 7. A common creeper of the hedges. See கோவ்வை. (திவா.) விம்பவிதழ்க குமுபமுலை (குற்று. தல. தருமசாமி. 21). 8. A mineral poison. See பலண்டுறுக பாஷாணம். (W.)

விம்பமுத்திரை vimpa-muttirai, *n.* <விம்பம்+. (Śaiva.) A hand-pose in worship; முத்திரைவகை. (செந். x, பக். 425.)

விம்பி-த்தல் vimpi-, 11 *v. intr.* <id. To be reflected, as an image; பிரதிபலித்தல். (W.)

விம்பிகை vimpikai, *n.* <*bimbikā*. A common creeper of the hedges. See கோவ்வை. (மலை.)

விம்பு vimpu, *n.* <*vimbu*. Areca palm. See கமுகு. (யாழ். அக.)

விம்மட்டம் vimmaṭṭam, *n.* See விம்மிட்டம். *Loc.*

விம்மம் vimmam, *n.* <விம்மு-. 1. See விம்மல், 1. விம்ம முறுதல் விளைவது முடைத்தோ (பெருங். வத்தவ. 6, 37). 2. See விம்மல், 2. விம்ம முறுமவள் (பெருங். இலாவாண. 16, 99).

விம்மல் vimmal, *n.* <id. 1. Sobbing; தேம்பி யழுகை. (பிங்.) 2. Distress; துன்பம். இன்னதோர் விம்மமுனுவ (கம்பரா. உருக்காட்டு. 88). 3. Despondency; ஏக்கம். நெஞ்சிற் சிறியதோர் விம்மல கொண்டான் (கம்பரா. பாசப். 17). 4. Being puffed up or swollen; வீங்குகை. உவகை பொங்க விம்மலானிமிர்ந்த நெஞ்சா (கம்பரா. திருவடிதொ. 8). 5. Elation of spirits; உள்ளப்பூரிப்பு. வீடின ராக்க

ரென்றுவக்கும் விம்மலால் (கம்பரா. திருவவ. 15). 6. Sounding; ஒலிக்கை. (பிங்.) 7. Sound of lute strings; யாழ்நரம்போசை. (பிங்.)

விம்மல்பொருமல் vimmal-porumal, *n.* <விம்மல்+. 1. Change in the body due to great joy or sorrow; சுகதுக்க மேலீட்டால் உண்டாம் சரீர வேறுபாடு. 2. Inexpressible grief; துக்கமிகுதி. *விம்மல்பொருமலாய்ப் படுகிறீயாகாதே* (ஈடு, 2, 1, 3).

விம்மா-த்தல் vimmā-, *12 v. intr.* See விம்மு-, 1, 2, 3. *விம்மாந்தி யான்வீழ* (சீவக. 1801).

விம்மிட்டம் vimmiṭṭam, *n.* Feeling of suffocation; feeling close and sultry; புழுக்கம். *இரவு முழுதும் இச்சிறு அறையுட் கிடந்து விம்மிட்டப் பட்டேன். Nāñ.*

விம்மிதம்[1] vimmitam, *n.* perh. விம்மு-. Body; உடல். (பிங்.)

விம்மிதம்[2] vimmitam, *n.* <*vismita*. 1. Admiration; அதிசயம். (திவா.) *விம்மித மென்னென் றிசைக்குவ மற்றே* (ஞானா. 49, 9). 2. Delight; உவகை. *ஐயையுந் தவ்வையும் விம்மித மெய்தி* (சிலப். 16, 52). 3. Fear; அச்சம். (W.)

விம்மிஷ்டம் vimmiṣṭam, *n.* See விம்மிட்டம். *Nāñ.*

விம்மீன் vimmīṉ, *n.* Corr. of விண்மீன். *Loc.*

விம்மு[1]**-தல்** vimmu-, *5 v.* [K. *bimmu*, M. *vimmuga*.] *intr.* 1. To heave a sob, as a child; தேம்பியழுதல். (பிங்.) *சிதரரிக்கண் கொண்டநீர் மெல்விரலூழ் தெறியா விம்மி* (நாலடி, 394). 2. To be in distress; வருந்துதல். *கொடியாள் விளைவித்த வினைக்குவிம்மி* (கம்பரா. நகர்நீங்கு. 124). 3. To rejoice; மகிழ்வுறுதல். (W.) 4. To swell, to become enlarged; பருத்தல். *வார்செலச் செல்ல விம்மும் வனமுலை* (சீவக. 469). 5. To extend, expand; to increase; மிகுதல். *விம்மகிற் புகையின்மேவி* (சீவக. 2667). 6. To be full; நிறைதல். *விம்ம வங்கமரார்க் கமுதளித்த வமரர் கோவே* (திவ். பெரியாழ். 2, 2, 9). 7. To open, as a flower; மலர்தல். *விம்மிய பெருமலர* (கலித். 22, 48). 8. To sound; ஒலித்தல். *கண்மகிழ்ந்து துடி விம்ம* (பு. வெ. 2, 8, கொளு).—*tr.* To bring forth; ஈனுதல். *சங்குவிம்மு நித்திலம்* (சீவக. 145).

விம்மு[2] vimmu, *n.* <விம்மு-. Weight; burden; கனம். (நாமதீப. 794.)

விம்முட்டம் vimmuṭṭam, *n.* See விம்மிட்டம். *Nāñ.*

விம்முயிர்-த்தல் vimmuyir-, *11 v. intr.* <விம்மு-+உயிர்-. To heave a sigh, as from grief; பெருமூச்சுவிடுதல். *விம்முயிர்த் தினையை யாத லொண்டொடி தருவ தன்றால்* (சீவக. 271).

விம்முறவு vimmuṟavu, *n.* <விம்முறு-. Trouble, distress; வருத்தம். *வேட்கையூர்தர விம்முற வெய்திய மாட்சி யுள்ளத்தை மாற்றி* (சீவக. 1634)

விம்முறு-தல் vimmuṟu-, *v. intr.* <விம்மு-+உறு-. To be in distress; வருந்துதல். *விம்முறு நுசுப்பு நைய* (சீவக. 606).

விம்மெனல் vimmeṉal, *n.* Onom. expr. of becoming tight; இறுகியதாதற் குறிப்பு. *கட்டு விம்மென்றிருக்கிறது.*

விமதம் vimatam, *n.* <*vi-mata*. Heterodox doctrine; புறச்சமயக் கொள்கை. (இலக். அக.)

விமதன் vimataṉ, *n.* <*vi-mata*. 1. Person belonging to an opposite school of thought, dissenter; வேறுபட்ட கொள்கையுள்ளவன். 2. See விமதஸ்தன், 1. 3. Enemy; பகைவன். (யாழ். அக.)

விமதஸ்தன் vimatastaṉ, *n.* <id.+*stha*. 1. Adherent of another religion; heretic; அந்நிய மதத்தவன். 2. See விமதன், 1.

விமர்ச்சம் vimarccam, *n.* <*vi-marśa*. See விமரிசம். (யாழ். அக.)

விமர்ச்சனம் vimarccaṉam, *n.* <*vi-marśana*. See விமரிசம். (யாழ். அக.)

விமர்த்தனம் vimarttaṉam, *n.* <*vi-mardana*. 1. Trituration; grinding to fine powder, அரைத்துப் பொடிசெய்கை. (யாழ். அக.) 2. Pounding; இடிக்கை. 3. Kneading, பிசைகை. 4. Destroying; அழிக்கை. (இலக். அக.) 5. Eclipse, கிரகணம். (யாழ். அக.)

விமரிசம் vimaricam, *n.* <*vi-marśa*. 1. Consideration, examination, review; ஆராய்ச்சி. (W.) 2. Reflection; deliberation; மனனம். *கேள்வி விமரிசம் பாவனை* (குறள், 357, உரை). 3. Clear understanding; புத்தித்தெளிவு. (நாமதீப. 647.)

விமரிசனம் vimaricaṉam, *n.* <*vi-marśana*. See விமரிசம்.

விமரிசை[1] vimaricai, *n.* <*vi-marśa*. 1. See விமரிசம். *விமரிசையாகப் படிக்கவில்லை.* 2. Eclat; pomp; ஆடம்பரம். *அங்கே சபை வெகு விமரிசையாக நடந்தது.*

விமரிசை[2] vimaricai, *n.* Pārvatī; பார்வதி. (நாமதீப. 24.)

விமலம் vimalam, *n.* <*vi-mala*. 1. Stainlessness; அழுக்கின்மை. (திவா.) 2. Purity; பரிசுத்தம். (சூடா.) 3. Clearness; transparency;

தெளிவு. 4. An ancient Śaiva scripture in Sanskrit, one of 28 *civākamam*, q.v.; சிவாகமம் இருபத்தெட்டனுள் ஒன்று (சைவச. பொது. 334, உரை.)

விமலர் vimalar, n. <*vimala*. A Jaina Arhat, one of 24 *tīrttaṅkarar*, q.v.; தீர்த்தங்கரர் இருபத்துநால்வருள் ஒருவர். (திருக்கலம். காப்பு, உரை.)

விமலன் vi-malaṉ, n. <*vi-mala*. 1. He who is immaculate; பரிசுத்தமானவன். அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன் (திவ். அமலனாதி. 1). 2. Śiva; சிவபிரான். (பிங்.) 3. Arhat; அருகன். (சூடா.) 4. See விமலர். செற்றமக லப்பான் விமலன்சரண சென்னிவைத்தேன் (மேருமந். 1).

விமலாகாசம் vimalākācam, n. <*vi-malā-kāśa*. Region of pure intelligence. See சிதாகாசம். (W.)

விமலி vimali, n. <*vi-malā*. 1. Sarasvatī; சரசுவதி. (W.) 2. Pārvatī; பார்வதி. விமலிமுனருளு முருகோனே (திருப்பு. 583). 3. Indian acalypha. See குப்பைமேனி. (நாமதீப. 321.)

விமலை vimalai, n. <*vi-malā*. 1. She who is immaculate; பரிசுத்தமானவள். 2. Sarasvatī; சரசுவதி. (சிலா.) 3. Lakṣmī; இலக்குமி. (பிங்.) 4. Durgā; துர்க்கை. (W.) 5. Pārvatī; பார்வதி. (நாமதீப. 22) 6. The Ganges; கங்கை. (பிங்.) 7. The Gōdāvari; கோதாவரி. (பிங்.)

விமார்க்கம் vimārkkam, n. <*vi-mārga*. 1. Bad conduct; immorality; தீயொழுக்கம். (W.) 2. Broom, broom-stick; விளக்குமாறு.

விமார்த்தம் vimārttam, n. prob. *vyāma*+*ardha*. Half the duration of a lunar eclipse; சந்திரகிரகணப் பொழுதிற்பாதி. (W.)

விமானபீடிகை vimāṉa-pīṭikai, n. <*vi-māna-pīṭhikā*. Altar in a temple; கோயிற் பலிபீடம். வேதநாயகி விமானபீடிகை (தக்கயாகப். 138).

விமானம் vimāṉam, n. <*vimāna*. 1. Fabulous, self-moving aerial car; ஆகாச ரதம். தனிசியல் விமானஞ் சேர்ந்தாள் (சீவக. 564). 2. The vehicle of the Moon-God; சந்திரனூர்தி. (பிங்.) 3. Vehicle; ஊர்தி. 4. Turret of a temple surmounting the cell in which the chief image is placed; கர்ப்பக்கிருகத்தின் மேலுள்ள தூபி. தூயவிமானமுந் தூலமதாகும் (திருமந். 1718). விமானப் புரிசைசெய்து (திருவாலவா. 48, 22). 5. Seven-storied palace; ஏழடுக்குமேத்தையுள்ள மாளிகை. (W.) 6. Palace; அரண்மனை. (இலக். அக.) 7. Temple; தேவர்கோயில். (W.) 8. The world of the celestials; தேவலோகம். (சூடா.) 9. The fourth *nakṣatra*. See உரோகிணி. (பிங்.)

விமானரேகை vimāṉa-rēkai, n. <id.+. (Palmistry.) A kind of mark on the palm of hand; உள்ளங்கையின் இரேகைவகை. (திருவாரூர்க் குறவஞ்சி.)

விமானவாசி vimāṉa-vāci, n. <id.+*vāsin*. Celestial being; தேவலோகவாசி. (தக்கயாகப். 268.)

விமானவாயில் vimāṉa-vāyil, n. <விமானம்+. Main gateway of a temple; கோயில்வாயில். விமானவாயில புகுந்தாம்மையாா திறமினோ (தக்கயாகப். 34).

விமுகன் vimukaṉ, n. <*vi-mukha*. One who is averse or disinclined; முகங்கோடாதவன்.

விமோசனம் vimōcaṉam, n. <*vi-mōcana*. Deliverance, liberation; absolution, as from sin; நீங்குகை. இருணவிமோசனந் தாவினுமம் (சேதுபு. தனுக. 73).

விய[1]**-த்தல்** viya-, 12 v. intr. 1. To wonder; அதிசயித்தல். கேட்டவா வியப்பவும் (திருவாச. 3, 154). 2. To be proud; செருக்குறுதல். செல்வமெய்தி வியந்தனை யுதவி கொன்றாய் (கம்பரா. கிட்கிந். 81).—tr. 1. To wonder at; அதிசயித்தல். 2. To esteem, admire; நன்கு மதித்தல். மடமகள் ளை வியந்தன்று மிழிந்தன்று மிலனே (புறநா. 77). 3. To praise, extol, compliment; பாராட்டுதல். விழைந்தொருவா தமமை வியபப (நாலடி, 339).

விய[2] viya, n. See வியவு. (பொருட். நி.)

வியக்கம் viyakkam, n. prob. விய-. Greatness; பெருமை. (W.)

வியக்களை viyakkaḷai, n. House rent; குடிக்கூலி. (யாழ். அக.)

வியக்தம் viyaktam, n. <*vyakta*. See வியத்தம். (W.)

வியக்தி viyakti, n. <*vyakti*. See வியத்தி.

வியங்கம் viyaṅkam, n. <*vyaṅga*. 1. Natural fault; இயற்கையான குற்றம். (W.) 2. Congenital defect; பிறவி யூனம். (W.) 3. Frog; தவளை. (சங். அக.)

வியங்கியம் viyaṅkiyam, n. <*vyaṅgya*. 1. (Gram.) Suggested sense; meaning hinted at; குறிப்புப்பொருள். (நன் 269, விருத்.) 2. Wit, irony, sarcasm; குத்தலான வார்த்தை. (W.)

வியங்குலம் viyaṅkulam, n. <*vyaṅgula*. A linear measure = 1/60 finger's breadth; விரற்கிடையில் அறுபதிலொன்று. (W.)

வியங்கொள்(ளு)-தல் viyaṅ-koḷ-, v. <வியம்[1]+. intr. To obey orders; to submit; ஏவலைக்கொள்ளுதல். வினைகடைக் கூட்ட வியங

கொண்டான் (சிலப். 9, 78).—*tr.* To drive, as a chariot; செலுத்துதல். தேர்வியங்கொண்டபத்து (ஐங்குறு. பக். 139.)

வியங்கோள் viyaṅkōḷ, *n.* < வியங்கொள்-. 1. Command; ஏவல். (சூடா.) 2. (Gram.) Optative mood of verbs; வினைமுற்றுவகை. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி (தொல். சொல். 224).

வியசனம் viyacaṉam, *n.* < *vyasana.* 1. Sorrow, grief; துக்கம். 2. See வியதனம், 1.

வியஞ்சகம் viyañcakam, *n.* < *vyañjaka.* 1. Making clear, indicating; விளங்கும்படி செய்கை. அப்புலன்களை வியஞ்சகப் படுத்தும் காரணங்களை (பிரபஞ்சவி. 46). 2. That which makes clear; விளக்குங் கருவி. வியஞ்சகத்தான் விளங்கி (சி. போ. பா. 10, 1, பக். 403). 3. Suggested sense; குறிப்புப்பொருள். 4. (Nāṭya.) Pantomime; அபிநயம். (W.)

வியஞ்சனம் viyañcaṉam, *n.* < *vyañjana.* 1. Mark, badge, sign, token; அடையாளம். (சங். அக.) 2. (Gram.) Consonant, மெய்யெழுத்து. மெய்கள் விளம்பு மலலொடு வியஞ்சனமாம் (பி. வி. 4). 3. (Gram.) The power of a word, by virtue of which, it suggests or implies an additional sense; குறிப்பிற் பொருளுணர்த்துஞ் சொல்லினது ஆற்றல். 4. Curry, as a relish for rice; உணவுக்கு உபகரணமான கறிமுதலியன. *Colloq.* 5. Condiments; கறிக்குதவும் பொருள்கள்.

வியஞ்சனாவிருத்தி viyañcaṉā-virutti, *n.* < *vyañjanā-vṛtti.* (Gram.) The power of a word to suggest or imply from its position in a sentence, a sense other than its primary and derivative senses; குறிப்பாற் பொருளுணர்த்தும் சொல்லின் ஆற்றல். (பி. வி. 50, உரை.)

வியஞ்சனை viyañcaṉai, *n.* < *vyañjanā.* See வியஞ்சனம், 3

வியட்டி viyaṭṭi, *n.* < *vyaṣṭi.* Individuality, opp. to *camaṭṭi;* தனிப்பட்டது. சமட்டி வியட்டி யென்றிரண்டு மேதுவாம் (திருவிளை. வேதத் துக்குப. 33).

வியட்டிரூபம் viyaṭṭi-rūpam, *n.* < id. +. The visible form of things; தூலவுரு. (W.)

வியடம்பகம் viyaṭampakam, *n.* < *vyaḍambaka.* Castor-plant. See ஆமணக்கு. (மூ. அ.)

வியத்தபதம் viyatta-patam, *n.* < *vyasta-pada.* Component words of a compound, stated separately; சமாசத்திலடங்கிய தனிச்சொற்கள். (பி. வி. 46, உரை.) 2. Single word, not forming part of a compound; தனிச்சொல். (யாழ். அக.)

வியத்தம் viyattam, *n.* < *vyakta.* 1. Distinctness, clearness; வெளிப்படை. 2. That which is perceptible to the senses; புலன்களுக்கு விஷயமாவது. அங்க மனைத்தும் விளங்கு மவ்வி லிங்கமே வியத்தமாம (சைவச. பொது. 119).

வியத்தாவ்வியத்தம் viyattāvviyattam, *n.* < id. + *a-vyakta.* That which is partly manifested and partly un-manifested; ஒரு பகுதி வெளிப்பட்டும் மற்றப்பகுதி வெளிப்படாது மிருப்பது. (சைவச. பொது. 120.)

வியத்தி viyatti, *n.* < *vyakti.* 1. Visible appearance, manifestation; வெளிப்படையாகத் தோற்றுவது. 2. Form; உருவம். 3. Individual; ஆள். *Loc.* 4. Effect, result; காரியம். (யாழ். அக.)

வியத்திகை viyattikai, *n.* perh. *vyat.* Greatness, excellence; பெருமை. (சது.)

வியத்தியாசம் viyattiyācam, *n.* < *vyatyāsa.* 1. Difference. See வித்தியாசம். 2. Being separated from one group and added to another; ஓரிடத்திற் பிரிந்து பிறிதோரிடத்துச் சேருகை. (யாழ். அக.)

வியதனம் viyataṉam, *n.* < *vyasana.* 1. Vice, arising from drunkenness, sensuality, etc.; கள்ளுண்ணல் காமம் முதலியவற்றா லுண்டாகுங் குற்றம். கள்ளுண்ணல் . . . இவையோ ரேழும் வியதன மெனவுரைப்பர் (திருக்காளத். பு. வருணச். 13). 2. See வியசனம், 1.

வியதாகரம் viyatākaram, *n.* < *vyathā* + *hara.* Act of beneficence which consists in giving comfort and consolation to the afflicted, one of 14 *tayā-virutti,* q.v.; தயாவிருத்தி பதினான்கனுள் துன்புற்றவன்மாட்டு நன்மைசெய்து காப்பாற்றுஞ்செயல். (சது.)

வியதிபாதம் viyatipātam, *n.* < *vyatīpāta.* (Astron.) A division of time, one of 27 *yōkam,* q.v.; யோக மிருபத்தேழனுள் ஒன்று. (பெரியவரு.)

வியதிரேகம் viyatirēkam, *n.* < *vyatirēka.* 1. Distinction, difference; வேறுபாடு. (W.) 2. Negation, contrariety, contrast; எதிர்மறை. (W.) 3. (Log.) Absence of co-existence; உடனில்லாத நிலை. புகையின் அன்வய வியதிரேகங்களால் நெருப்பின் உண்மையின்மைகள் தெரியப்படும். 4. (Rhet.) A figure of speech in which the difference between the things compared is mentioned explicitly; வேற்றுமையணி. (தண்டி. 47, பக். 88.)

வியதீபாதம் viyatīpātam, *n.* < *vyatīpāta.* See வியதிபாதம்.

வியந்தம் viyantam, n. cf. வியந்தை. (Mus.) A melody-type; பண்வகை. (திவ். திருவாய். 1, 7, பண்குறிப்பு.)

வியந்தரம் viyantaram, n. <vyantara. Devil; பிசாசு. (பிங்.)

வியந்தரர் viyantarar, n. <vyantara. (Jaina.) A class of gods, one of nālvakai-t-tēvar, q. v.; நால்வகைத்தேவருள் ஒருசாரார். (மேருமந். 8, உரை.)

வியந்தரேந்திரர் viyantarēntirar, n. <vyantarēndra. (Jaina.) A class of catēntirar; சதேந்திரருள் ஒருசாரார். (மணி. 27, 171, உரை.)

வியநிலையுருவகம் viya-nilai-y-uruvakam, n. <வியம்² + நிலை +. (Rhet.) A metaphor which is only partly worked out as regards the details of comparison; அவயவியை உருவகஞ்செய்தும் அவயவங்களுட் சிலவற்றை யுருவகஞ் செய்தும் சிலவற்றைச் செய்யாது விடுத்தும் வரும் அணிவகை. (தண்டி. 35, 6.)

வியநெறி viya-neṟi, n. <வியம்¹ +. Highway, main street, பெரும்பாதை. (W.)

வியப்ப viyappa, part. <விய-. A particle of comparison; ஓர் உவமவாய்பாடு. நேர வியப்ப (தொல். பொ. 291).

வியப்பணி viyappaṇi, n. <வியப்பு + அணி². See வியப்பு¹, 2. (அணியி. 40.)

வியப்பம் viyappam, n. <id. See வியப்பு¹, 1. வேம்பணி தோளினுன் வியப்ப மெய்தியே (திருவிளை. நரிபரி. 97).

வியப்பு¹ viyappu, n. <விய-. 1. Amazement, surprise; அதிசயம். வியப்புஞ் சால்புஞ் செம்மை சான்றோர (மதுரைக். 764). 2. (Rhet.) A figure of speech which describes the efforts taken for the achievement of an object other than the one intended; ஒரு பயனைச்கருதி அதற்கு மாறுகிய முயற்சி செய்வதாகக் கூறும் அணி. (அணியி. 40.) 3. Admiration; பாராட்டு. (யாழ். அக.) 4. Greatness, excellence; மேம்பாடு. சால்பும் வியப்பு மியல்புங் குன்றின் (குறிஞ்சிப். 15). 5. Measurement; அளவு. இசைத்த மூன்றின் வியப்பற விறந்த (ஞானா. 18).

வியப்பு² viyappu, n. See வியர்ப்பு, 2, 3. (பிங்.)

வியபசாரம் viyapacāram, n. See வியபிசாரம். Loc.

வியபதிஷ்டன் viyapatiṣṭaṉ, n. <vyapadiṣṭa. Famous person; பிரசித்தன்.

வியபதேசம் viyapatēcam, n. <vyapadēśa. 1. (Gram.) The extension of the application of a rule; மாட்டேற்று. (பி. வி. 37.) 2. Ascription; சாட்டு. (யாழ். அக.) 3. Stratagem; தந்திரம். (யாழ். அக.) 4. Ostensible reason; வியாஜம்.

வியபிசரி-த்தல் viyapicari-, 11 v. intr. <vyabhi-cāra. 1. To commit adultery; சோரம் போதல். 2. (Log.) To commit the logical blunder of vyapicāram; சாத்தியமில்லாதவிடத்து ஏது இருப்பதாகத் தருச்கமுறை பிறழக் கூறுதல்.

வியபிசாரம் viyapicāram, n. <vyabhi-cāra. 1. Infidelity, faithlessness of a wife or husband; கற்புநெறி தவறுகை. 2. (Log.) Fallacious reasoning which argues the presence of the deduction in the absence of the major premise; சாத்தியமில்லாதவிடத்து ஏதுவிருப்பதாகிய ஏதுப்போலி. (தருக்கசௌ. 22.)

வியபிசாரி viyapicāri, n. <vyabhi-cāriṇī. Adulteress; கற்புநெறி தவறியவள்.

வியம்¹ viyam, n. [K. besa.] 1. Command, order; ஏவல். வியங்கொளவருதல (தொல். சொல். 67). 2. Body; உடல். (பிங்.) 3. cf. இயவு. Sending a person on his way; போக்கு. (சீவக. 1886, உரை.) 4. cf. இயவு. Way; வழி. ஆகுவியங் கொண்மின் (மலைபடு. 427).

வியம்² viyam, n. <vi-ṣama. 1. Thing which is odd, unequal or dissimilar; சமமற்றது. வியநிலை யுருவகம் (தண்டி. 35, 6). 2. Odd number; ஒற்றைப்பட்ட எண். முன்னிலை யெழுத்தின் வியநிலை நலனே (பன்னிருபா. 140). 3. Rudeness, coarseness; முருட்டுத்தன்மை. வியமுடை விடையினம் (திவ். பெரியதி. 8, 7, 1). 4. Change, as of mind; வேறுபாடு. (திவ். பெரியதி. 8, 7, 1, வ்யா.)

வியம்³ viyam, n. perh. வியல்¹. cf. viyat. 1. Extensiveness; விரிவு. வியமபெறு தோற்றமும் (திருக்காளத். பு. ஞானோப. 62). 2. Height; உயரம். (திவ். பெரியதி. 8, 7, 1, வ்யா.)

வியம்⁴ viyam, n. perh. dvija. Bird; பறவை. (பிங்.)

வியமம் viyamam, n. prob. விய-. That which is worthy of admiration; பாராட்டத்தக்கது. வியமமே வாழிகுதிரை (கலித். 96).

வியய viyaya, n. <Vyaya. The 20th year of the Jupiter cycle; வருஷம் அறுபதனுள் இருபதாவது.

வியயம் viyayam, n. <vyaya. Expenditure; பணச்செலவு. இத்தேவருடைய ஆயமும் வியயமும் . . . சொல்லுக (S. I. I. iii, 102).

வியயஸ்தானம் viyaya-stāṉam, n. <id. +. (Astrol.) Twelfth house from the ascendant in a horoscope, indicating expenditure or loss; சாதகசக்கரத்தில் செலவழிவுகளைக் காட்டும் பன்னிரண்டாமிடம்.

வியர்[1]-த்தல் viyar-, 11 v. intr. cf. வேர்-. [K. bemar.] 1. To sweat, perspire; உடலின் மேற்புறத்து நீர்த்துளி தோன்றுதல். முயங்க யான் வியர்த்தன னென்றனள் (குறுந். 84). 2. To feel irritated, as from envy; பொறாமை முதலிய வற்றால் மனம் புழுங்குதல். வியர்த்த லைய மிகை நடுக் கெனாஅ (தொல். பொ. 260). 3. To be angry; சினங்கொள்ளுதல். (பிங்.)

வியர்[2] viyar, n. <வியர்-. 1. Perspiration; உடலின் மேற்புறத்துத் தோன்றும் நீர்த்துளி. குறுவியர் பொடித்த கோலவாண் முகத்தள் (மணி. 18, 40). 2. Weariness, exhaustion; இளைப்பு. பகடெறிந்த வியர்விட . . . ஆடுபவே (கலித். 40).

வியர்த்தம் viyarttam, n <vyartha. 1. Absence of meaning; பொருளின்மை. 2. Uselessness; பயனின்மை. (W.)

வியர்ப்பு viyarppu, n <வியர்-. 1. See வியர்வை. வெய்துண்ட வியர்ப்பல்லது (புறநா. 387). 2. Anger; சினம். (திவா.) 3. Mark of anger; சினக்குறிப்பு. (திவா.)

வியர்வு viyarvu, n. See வியர்வை.

வியர்வை viyarvai, n. <வியர்-. 1. See வியர், 1. 2. Mark or indication of wrath; சினக்குறிப்பு. (பிங்.)

வியர்வைக்கட்டி viyarvai-k-kaṭṭi, n. <வியர்வை+. Summer boil; கோடையில் வேர்வையால் உண்டாம் புண்கட்டி. (M. L.)

வியல்[1] viyal, n. cf. வியம்[3]. 1. Greatness; பெருமை. மூழ்த்திறுத்த வியன்றுனை (பதிற்றுப். 33, 5). 2. Width, expansion, extension; vastness; அகலம். வியலென் கிளவி யகலப் பொருட்டே (தொல். சொல். 364). 3. Abundance; மிகுதி. (சிலப். 5, 7, உரை.) 4. Gold; பொன். (சங். அக.) 5. Forest, jungle; காடு. (பிங்.) 6. Wooden tray; மரத்தட்டு. (அக. நி.)

வியல்[2] viyal, n. cf. வியம்[2]. Diversity; பல திறப்படுகை. வியன் கலவிருக்கையும் (சிலப். 5, 7).

வியல்கணா viyalkaṇā, n. prob. வியல்[1]+ kaṇā. Long pepper. See திப்பலி. (மலை.)

வியல்பூதி viyalpūti, n. <id. + பூதி[2]. Beal; வில்வம் (மலை.)

வியலகம் viyalakam, n. <id.+. See வியலிடம், 1. விரிகடல் வேலி வியலகம் விளங்க (சிறுபாண். 114).

வியலிகை viyalikai, n. <id. cf. வியத்திகை. Greatness; பெருமை. (யாழ். அக.)

வியலிடம் viyal-iṭam, n. <id. +. 1. The wide world; பூமி. இவ்வியலிடத்தே (திருக்கோ. 277). 2. Breadth; அகலம். (சூடா.)

வியலுள் viyal-uḷ, n. <id. + உள்[2]. Wide, open space; அகன்ற இடம் விழவுவீற் றிருந்த வியலு ளாங்கண் (பதிற்றுப். 56, 1).

வியவகரி-த்தல் viyavakari-, 11 v. tr. <vyava-hṛ. 1. To speak, tell; பேசுதல். உலகத்தார் வியவகரிக்கும் அழகுடையது அது (தக்கயாகப். 142, உரை). 2. To discuss; தருக்கித்தல்.

வியவகாரகாரணம் viyavakāra-kāraṇam, n. <vyavahāra+. (Legal.) Cause of action; வியாச்சியமூலம். Nāñ.

வியவகாரநிர்ணயம் viyavakāra-nirṇayam, n <Vyavahāra-nirṇaya. A treatise on Hindu Law in Sanskrit, by Varadarājar; வரதராஜர் என்பார் வடமொழியில் எழுதிய தருமநூல்.

வியவகாரம் viyavakāram, n. <vyavahāra. See விவகாரம்.

வியவகாரி viyavakāri, n. <vyavahārin. See விவகாரி.

வியவசாயம் viyavacāyam, n. <vyavasāya. 1. See விவசாயம். 2. Wisdom; ஞானம். (சங். அக.)

வியவன் viyavaṉ, n. <வியம்[1]. [K. besadavan.] 1. Servant; ஏவல்செய்வோன். இளையனா வியவரின் விடுவே (சீவக. 601). 2. Commander; person in authority; ஏவுவோன். (பிங்.) 3. Headman; தலைவன். நாட்டுவியவன் சொல்லிய எல்லை போய (S. I. I. ii, 352). 4. Strong, bold man; திண்ணியன். (பிங்.) 5. Traveller; வழிச்செல்வோன். (பிங்.)

வியவஸ்திதம் viyavastitam, n. <vyavasthita. That which is settled, established or fixed; முடிவு செய்யப்பட்டது. வியவஸ்தித வசனம் (சிவசம. 65).

வியவஸ்தை viyavastai, n. <vyava-sthā. 1. Settlement, arrangement; முடிவான ஏற்பாடு. எம்மிலிசைந்து வியவஸ்தை செய்தோம் (S. I. I. i, 65). 2. Deed of agreement; உடன்படிக்கைப் பத்திரம். (I. M. P. Tj. 1176-B.) 3. Written opinion on points of law with citation of the original texts on which it is based, submitted to a court by Hindu Law pandits; நியாயஸ்தலத்திற் பண்டிதர் எழுத்து மூலமாகக் கொடுத்துவந்த சட்ட அபிப்பிராயம். (C. G.) 4. Distinction; வித்தியாசம். Loc.

வியவு viyavu, n. cf. வியம்². Diversity, variation, வேறுபாடு. இணைபொருள்க ளூலபயில்லன வாய் வியவாய் (திவ். திருவாய். 7, 8, 3).

வியளம் viyaḷam, n. <viśeṣa. News; சமாசாரம். (J.)

வியன்¹ viyaṉ, n. <viyat. cf. வியம்³. 1. Sky; ஆகாசம். வியனிடை முழுவதுகெட (தேவா. 833, 7). 2. cf. வியல்¹. Greatness; பெருமை. (திவா.) 3. Excellence; சிறப்பு. (சூ, 8, 10, 1.) 4. Wonderfulness; வியப்பு. (சூ, 8, 10.) 5. Vastness; அகலம். (W.)

வியன்² viyaṉ, n. <வியம்². Oddness of numbers; எண்ணின் ஒற்றை. (சினேந். 178.)

வியன்சங்கலிதம் viyaṉ-caṅkalitam, n. <வியன்²+. (Math.) Odd terms forming a series; ஒற்றைப்பட்ட எண்களாலாகிய தொடர். (W.)

வியன்சமன் viyaṉ-camaṉ, n. <id.+. (W.) 1. See வியன்சமன்சங்கலிதம். 2. Equality and inequality; disparity; ஏற்றத்தாழ்வு. வியன் சமன் பாராக்கிருன்.

வியன்சமன்சங்கலிதம் viyaṉcamaṉ-caṅkalitam, n. <வியன்சமன்+. Series of odd numbers taken an even number of times, as 1, 3; 1, 3, 5, 7; ஒற்றையெண்கள் இரட்டைப்பட வருந் தொடர். (W.)

வியன்மணி viyaṉmaṇi, n. <viyan-maṇi. Sun; சூரியன். (யாழ். அக.)

வியன்வியன்சங்கலிதம் viyaṉ-viyaṉcaṅkalitam, n. <வியன்²+. Series of odd numbers taken an odd number of times, as 1, 3, 5; 1, 3, 5, 7, 9; ஒற்றையெண்கள் ஒற்றைப்பட வருந்தொடர். (W.)

வியனிலைமருட்பா viyaṉilai-maruṭpā, n. <id.+நிலை+. (Pros.) A kind of maruṭpā in which the lines of veṇpā and āciriyappā are found confusedly mixed up; வெண்பாவடியும் ஆசிரியவடியும் ஒவ்வாதுவரும் மருட்பாவகை. (இலக். வி. 749, உரை.)

வியனிலைவஞ்சி viyaṉilai-vañci, n. <id. +id.+வஞ்சி². (Pros.) A kind of vañci verse with three metrical feet in each line; மூச்சீரடி வஞ்சிப்பா. (தொல். பொ. 350, உரை.)

வியனுலகம் viyaṉ-ulakam, n. <வியன்¹+. Celestial world; தேவலோகம். (சூடா.)

வியஷ்டி viyaṣṭi, n. <vyaṣṭi. See வியட்டி.

வியாக்கியாதா viyākkiyātā, n. <vyākhyātā nom. sing. of vyākhyātṛ. Commentator, expositor; உரையாசிரியன்.

வியாக்கியானம் viyākkiyāṉam, n. <vyākhyāna. Exposition, explanation, comment, commentary; உரை. தமக்குத தோன் றியவா றெல்லாம . . . வியாக்கியானஞ்செய்து (சிவ சம. 33).

வியாக்கியானன் viyākkiyāṉaṉ, n. <வியாக் கியானம். See வியாக்கியாதா. (W.)

வியாக்கியானி viyākkiyāṉi, n. <id. See வியாக்கியாதா. (W.)

வியாக்கியை viyākkiyai, n. <vyākhyā. See வியாக்கியானம். நஞ்சீயா செய்த வியாக்கியை களை (உபதேசரத். 47).

வியாக்கிரகதி viyākkira-kati, n. <vyāghra +gati. Tiger-like pace of horse, one of five acuva-kati, q.v.; அசுவகதி ஐந்தனுள் புலிபோற் பாயுங் கதி.

வியாக்கிரதலம் viyākkira-talam, n. <vyāghra-dala. Castor plant. See ஆமணக்கு. (மூ. அ.)

வியாக்கிரதீபம் viyākkira-tīpam, n. <vyāghra+. A kind of lamp waved before idols; அலங்காரதீபவகை. காதிடு வியாக்கிரதீபம் (பரத. ஒழிபி. 41).

வியாக்கிரநகம் viyākkira-nakam, n. <id.+nakha. 1. Tiger's claw; புலியின்நகம். 2. Mysore-thorn. See புலிதொடக்கி. (மலை.)

வியாக்கிரபதன் viyākkirapātaṉ, n. <Vyāghrapāda. A Ṛṣi; ஒரு முனிவன். வியாக்கிர பாதனெனும பாவார் பெயரோதின பாரிடமே (கோயிற்பு. வியாக்கிர. 20).

வியாக்கிரபுச்சம் viyākkira-puccam, n. <vyāghra-puccha. Castor plant. See ஆம ணக்கு. (மூ. அ.)

வியாக்கிரம் viyākkiram, n. <vyāghra. Tiger; புலி. (பிங்.)

வியாக்கிராசனம் viyākkirācaṉam, n. <id.+āsana. Tiger's skin, used as a seat; புலித்தோலாலான ஆசனம்.

வியாக்கிரி viyākkiri, n. <vyāghrī. A highly thorny plant. See கண்டங்கத்திரி. (மலை.)

வியாகம் viyākam, n. <viśākha. The 16th nakṣatra. See விசாகம். எழுநாள் திருவிழாச் செய்து பங்குனி வியாகம் ஆறுவெதாகவும (T. A. S. i, 6).

வியாகரணம் viyākaraṇam, n. <vyākaraṇa. 1. Grammar, one of aṟupattunālukalai, q.v.; அறுபத்துநாலுகலைகளுள் ஒன்றன

இலக்கணம். 2. Sanskrit grammar, one of six *vētāṅkam*, q.v.; வேதாங்கம் ஆறனுள் ஒன்றான வடமொழியிலக்கணம். ஐந்திரத் தொடக்கத்து வியாகரண மும (கலித். கடவுள்வா. உரை).

வியாகன் viyākaṉ, *n.* <*viśākha*. Skanda. See விசாகன். (J.)

வியாகாதம் viyākātam, *n.* <*vyāghāta*. 1. Obstacle, impediment, hindrance; இடையூறு. (யாழ். அக.) 2. Destruction; அழிவு. (யாழ். அக.) 3. (Astron.) A division of time, one of 27 *yōkam*, q.v.; யோகமிருபத்தேழனுள் ஒன்று. (பெரிய வரு.)

வியாகிருதி viyākiruti, *n.* <*vyāhṛti*. Mystical mantras denoting the seven upper worlds; மேலுலகமேழையும் கூறும் மந்திரங்கள். (W.)

வியாகுலம் viyākulam, *n.* <*vyākula*. 1. Sorrow, trouble, grief; துக்கம். 2. Anxiety; கவலை. ஏழைகள் வியாகுலமி தேதென வினவி (திருப்பு. 176). 3. Perplexity, bewilderment; மயக்கம். *Loc.*

வியாகுலி-த்தல் viyākuli-, 11 *v. intr.* <வியாகுலம். To be sad, sorrowful, troubled; துக்கப்படுதல்.

வியாச்சியக்காரன் viyācciya-k-kāraṉ, *n.* <வியாச்சியம் + காரன்[1]. 1. Claimant in a law-suit, plaintiff; சொத்துக்குரிமை கொண்டாடி வியாச்சியந்தொடுப்பவன். *Loc.* 2. Disputant; வழக்காடுவோன்.

வியாச்சியம் viyācciyam, *n.* prob. *vyāja*. 1. Dispute; வழக்கு. 2. Law-suit; நியாயவழக்கு. *Mod.*

வியாச்சியமூலம் viyācciya-mūlam, *n.* <வியாச்சியம் +. Cause of action; வியாச்சியந் தீர்ந்து ஏதுவாயிருப்பது. *Loc.*

வியாசங்கம் viyācaṅkam, *n.* <*vyāsaṅga*. (யாழ். அக.) 1. Addition; கூட்டுகை. 2. Perplexity, confusion; கலக்கம்.

வியாசநிந்தை viyāca-nintai, *n.* <*vyāja* +. 1. (Rhet.) A figure of speech which consists in indirectly praising a person or thing by apparent censure; நிந்திப்பதுபோலப் புகழ்வதான அணி. (யாழ். அக.) 2. (Rhet.) A figure of speech. See வஞ்சப்பழிப்பு. (அணியி. 31.)

வியாசப்புகையிலை viyāca-p-pukaiyilai, *n.* prob. வியாசம்[2] +. Smuggled tobacco; சுங்கங்கொடுக்காது ரகசியமாய்க் கொண்டுவந்த புகையிலை. *Nāñ.*

வியாசபாரதம் viyāca-pāratam, *n.* <*Vyāsa* + *Bhārata*. The Mahābhārata composed by Vyāsa in Sanskrit; வியாசன் இயற்றிய வடமொழி மகாபாரதம்.

வியாசம்[1] viyācam, *n.* <*vyāsa*. 1. Separation, division; classification; பகுக்கை. 2. Written paper, essay; ஒருவிஷயத்தைப்பற்றி யெழுதுஞ் சட்டுரை. *Mod.* 3. A Sanskrit text-book on Hindu Law, ascribed to Vyāsa, one of 18 *taruma-nūl*, q.v.; தருமநூல் பதினெட்டனுள் வியாசன் இயற்றியதாகக் கூறப்படும் ஸ்மிருதி.

வியாசம்[2] viyācam, *n.* See வியாஜம்.

வியாசமதம் viyāca-matam, *n.* <*Vyāsa* + *mata*. The Uttara-mīmāmsā system of philosophy, founded by Vyāsa; வியாசனால் தாபிக்கப்பட்ட உத்தரமீமாஞ்சை மதம்.

வியாசன் viyācaṉ, *n.* <*Vyāsa*. An ancient sage, the original compiler of the four Vēdas and author of the Brahma Sutras, the Mahābhārata, the 18 chief Purāṇas, etc.; வேதங்களை வகுத்தவனும் பிரம்மசூத்திரம் பாரதம் பதினெண்புராணம் முதலியன இயற்றியவனுமான முனிவன்.

வியாடிகம் viyāṭikam, *n.* A flight of birds; ஒருவகைப் பறவைக்கதி. படீன மண்டிலம் வியாடிகம் (காசிக. திரிலோ. 6).

வியாத்தம் viyāttam, *n.* <*vyāpta*. See வியாப்தம். (W.)

வியாத்தி viyātti, *n.* <*vyāpti*. 1. See வியாப்தி, 1, 2. 2. (Log.) The relation of pervasion consisting in invariable concomittance, as of smoke and fire; நியதமான உடனிகழ்ச்சி. (சி. போ. பா. அவை. பக். 11.)

வியாத்திரன் viyāttiraṉ, *n.* <*vyāpṛta*. One who is engaged or concerned in a work; தொழினடத்துவோன். வெஞ்சினவேள்வி வியாத்திரனூர்தலை துஞ்சினவாபாடி (திருவாச. 14, 10).

வியாத்துவம் viyāttuvam, *n.* <*vyāpta* + *tva*. All-pervasiveness; வியாபகத்தன்மை. பரன்றன் வியாத்துவம் (திருமந். 1608).

வியாதம் viyātam, *n.* <*vyāsa*. Division; separation; வேறுபடுத்துகை. (சது.)

வியாதன்[1] viyātaṉ, *n.* <*Vyāsa*. The sage Vyāsa; வியாசன். வியாதனும் . . . மாமறை நான்கென வகுத்து . . . உரைத்தான் (பாகவத. 1, மாயவனமி. 33).

வியாதன்[2] viyātaṉ, *n.* <*vyādha*. 1. Hunter; வேடன். 2. Man of low birth; கீழ்மகன். (யாழ். அக.)

வியாதி viyāti, n. <vyādhi. 1. Disease, ailment, sickness, malady; நோய். ஆதியும் வியாதியுமின்றி (ஞானவா. மாவலி. 28). 2. Leprosy; குஷ்டம். Loc. 3. Arabian costum. See கோஷ்டம்[1], 2. (மலை.)

வியாதிக்காரன் viyāti-k-kāraṉ, n. <வியாதி+காரன்[1]. Sick man; நோயாளி. (W.)

வியாதிகாதம் viyātikātam, n. <vyādhi-ghāta. Indian laburnum. See சரக்கொன்றை. (மலை.)

வியாதிகிரஸ்தன் viyāti-kirastaṉ, n. <vyādhi+grasta. Sick man; நோயாளி.

வியாதிசாந்தி viyāti-cānti, n. <id.+. A propitiatory ceremony for the cure of disease; நோய்நீங்கச்செய்யும் சடங்குவகை. (W.)

வியாதிபரீட்சை viyāti-parīṭcai, n. <id. +. Diagnosis of a disease by an examination of nāṭi, mukam, malam, mūttiram, kaṇ, nā, carīram, toṉi; நாடி முகம் மலம் மூத்திரம் கண் நா சரீரம் தொனி என்ற எட்டினால் நோயைச் சோதிக்கை. (W.)

வியாதியஸ்தன் viyātiyastaṉ, n. See வியாதிஸ்தன். Colloq.

வியாதிஸ்தன் viyātistaṉ, n. <vyādhi-stha. Sick man; நோயாளி. (W.)

வியாதுதம் viyātutam, n. <vyādhūta. Movable thing; இயங்கியற்பொருள். (W.)

வியாப்தம் viyāptam, n. <vyāpta. That which is pervaded; வியாபிக்கப்பட்டது. (W.)

வியாப்தி viyāpti, n. <vyāpti. 1. Omnipresence; எங்குமிருக்கை. (W.) 2. Pervasion; பரந்திருக்கை. 3. (Log.) See வியாத்தி, 2.

வியாப்பியம் viyāppiyam, n. <vyāpya. 1. That which is pervaded; வியாபிக்கப்படுவது. அரனவற்கு வியாப்பியமே விமலை (சிவதரு. சிவஞான. 22.) 2. Arabian costum. See கோஷ்டம்[1], 2. (மலை.)

வியாபகம் viyāpakam, n. <vyāpaka. 1. Pervasion, diffusion; பரவியிருக்குந் தன்மை. 2. Omnipresence; எங்குமிருக்குந்தன்மை. 3. Being widely known; எங்கும் அறியப்படுந் தன்மை. அவன் வியாபகமுள்ளவன்.

வியாபகன் viyāpakaṉ, n. <vyāpaka. 1. God, as omnipresent; [எங்கு மிருப்பவன்] கடவுள். 2. Widely known person; எங்கும் அறியப்படுந் தன்மை படைத்தவன்.

வியாபகி viyāpaki, n. <Vyāpaki. The Energy of Siva, as all-pervasive; எங்கும் வியாபிக்குஞ் சிவசத்தி. விமலை வியாபகி (சிவதரு. சிவஞான யோ. 22).

வியாபரி[1]-த்தல் viyāpari-, 11 v. intr. <vyā-pr. 1. To operate, act; to be worked; தொழிற்படுதல். 2. To collect funds, as for a festival; நன்கொடை சேகரித்தல். இந்த உற்சவத்தை அவர் வியாபரித்துப் பண்ணுகிறார்.

வியாபரி[2]-த்தல் viyāpari-, 11 v. tr. cf. வியவகரி-. To tell; சொல்லுதல். (அக. நி.)

வியாபாதம் viyāpātam, n. <vyāpāda. Evil design; வஞ்சகம். (W.)

வியாபாதனம் viyāpātaṉam, n. <vyāpādana. Murder, killing; கொலை. (W.)

வியாபாரச்சரக்கு viyāpāra-c-carakku, n. <வியாபாரம்+. Articles of merchandise; விலைப்படுதற்கான பண்டம். (W.)

வியாபாரம் viyāpāram, n. <vyāpāra. 1. Action, operation; function; தொழில். மனமுதலைந்திற்கும . . . வியாபாரம (வேதா. சூ 77). 2. Trade, commerce; transaction; வாணிகம். Colloq.

வியாபாரி viyāpāri, n. <vyāpārin. Merchant, dealer, trader; வாணிகன்.

வியாபி[1] viyāpi, n. <vyāpin. That which is all-pervasive, as air; எங்கும் நிறைந்திருப்பது. நித்தன் மெய்த்தகு குணமிலி வியாபி (ஞானு. 1, 7).

வியாபி[2]-த்தல் viyāpi-, 11 v. tr. & intr. <vyāp. To pervade; எங்கும் பரந்து நிறைந்திருத்தல். எங்கும் வியாபித் துணரவா முனக்கு (தாயு. பாயப்புலி. 52).

வியாபிருதி viyāpiruti, n. <vyāvṛti. Being uncovered or open; மறைக்கப்படாதிருக்கை. லகுதை வியாபிருதி (சிவப்பிர. 30).

வியாபினி viyāpiṉi, n. <vyāpinī. 1. (Śaiva.) A mystic centre in the body, one of cōtacakalai, q.v.; சோடசகலைகளுள் ஒன்று. இதன் மேலுன்னி வியாபினி (தத்துவப். 141). 2. That which is all-pervasive; எங்கும் வியாபித்திருப்பது. (யாழ். அக.)

வியாமம் viyāmam, n. <vyāma. Fathom, the length of the extended arms; நான்குமுழம். (W.)

வியாமோகம் viyāmōkam, n. <vyāmoha. Excessive attachment; பெருமோகம். (திவ். திருவாய். 6, 1, பன்னீ. ப்ர.)

வியாயாமம் viyāyāmam, n. <vyāyāma. Bodily exercise; தேகப்பயிற்சி. (சுகசந். 71.)

வியாயோகம் viyāyōkam, n. <vyāyōga. (Rhet.) A species of drama in one act, des-

cribing a military or heroic exploit and excluding the sentiments of love and mirth, one of ten *rūpakam*, q.v.; ரூபகம் பத்தனுள் காமமும் ஆசியமும் நீக்கித் தலைவனது வீரச்செயலைக்கூறும் ஓரங்கமுடைய நாடகவகை. (சிலப். பக். 84, கீழ்க்குறிப்பு)

வியார்த்தி viyārtti, *n.* prob. *vivrti.* Meaning, exposition; பொருள். (W.)

வியாவகாரிகம் viyāvakārikam, *n.* <*vyāvahārika.* That which relates to everyday life or practice; வழக்கத்தில் இருப்பது. (வேதா. சூ. 32.)

வியாவர்த்திதம் viyāvarttitam, *n.* <*vyāvartita.* (Nāṭya.) A hand-pose; அபிநயக் கைவகை. (சீவக. 1257, உரை.)

வியாவிருத்தி viyāvirutti, *n.* <*vyāvṛtti.* Exclusion; rejection; தள்ளுகை. (யாழ். அக.)

வியாழக்கிழமை viyāḻa-k-kiḻamai, *n.* <வியாழன்+. Thursday; வாரத்தின் ஐந்தாவது கிழமை.

வியாழக்குறிஞ்சி viyāḻa-k-kuriñci, *n.* prob. வியாழம்² +. (Mus.) A secondary melody-type of *kuriñci* class; குறிஞ்சியாழ்த்திறத் தொன்று (பிங.)

வியாழசக்கரம் viyāḻa-cakkaram, *n.* <வியாழன் +. The Jupiter cycle of 60 years, beginning with *pirapava:* பிரபவாதி அறுபது வருஷ வட்டம். (W.)

வியாழசினேகன் viyāḻa-cinēkan, *n.* <id.+. Sun; சூரியன். (நாமதீப. 94.)

வியாழநோக்கம் viyāḻa-nōkkam, *n.* <id.+. 1. (Astrol.) Aspect of the planet Jupiter, in an horoscope; சாதக சக்கரத்திற் காணப்படும் குருநோக்கம். 2. See வியாழானுகூலம். *Loc.*

வியாழம்¹ viyāḻam, *n.* 1. Bṛhaspati, the preceptor of the gods; தேவகுரு. *வியாழந்தோடு மறைவழக்க கன்று வென்ற* (திருவாலவா. திருநகரப. 13). 2. Jupiter; ஒரு கிரகம். *முகநீரத் திரையிடை வியாழந் தோன்ற* (சீவக. 2467). 3. Thursday. See வியாழக்கிழமை. *திருத்தகு வியாழத்தின் மிக்க சம்பத்தினொடு சிறுவரைப் பெற்றெடுப்பாள்* (அறப். சத. 69).

வியாழம்² viyāḻam, *n.* <*vyāla.* Serpent; பாம்பு. *வெள்ளிவிடையில் வியாழம் புனைந்தாரைக் கணடு* (குற்ற. குற. 35, 5).

வியாழமாலை viyāḻamālai, *n.* See வியாழமாலையகவல். (சிலப். உரைப்பா.)

வியாழமாலையகவல் viyāḻamālai-y-akaval, *n.* <வியாழமாலை+. A poem of the middle Saṅgam, not now extant; இடைச்சங்கத்துநூல்களுள் ஒன்று. (இறை. 1, பக். 5.)

வியாழவட்டம் viyāḻa-vaṭṭam, <வியாழம்¹ + வட்டம்¹. *n.* 1. The period of 12 years, being the time taken by Jupiter for one revolution; வானமண்டலத்தில் குரு ஒருமுறை சுற்றிவருங் காலமாகிய பன்னிரண்டு. (சங். அக.) 2. See வியாழசக்கரம். (W.)—*adv.* Every Thursday; வியாழக்கிழமைதோறும். (W.)

வியாழன் viyāḻan, *n.* See வியாழம்¹.

வியாழானுகூலம் viyāḻāṉukūlam, *n.* <வியாழன் + அனுகூலம். Beneficent aspect of the planet Jupiter, as conducive to matrimonial happiness, etc.; விவாகம் முதலிய சுப பலன்களைக் குறிக்கும் குருநோக்கம். *Loc.*

வியாளக்கிராகி viyāḷa-k-kirāki, *n.* <*vyāla grāhin.* Snake-catcher. See பிடாரன், 1. (W.)

வியாளம் viyāḷam, *n.* <*vyāla.* 1. Snake; பாம்பு. (சூடா.) 2. Tiger; புலி. (சூடா.) 3. A mythological animal. See யாளி, 1. 4. Vicious elephant; கெட்டகுணமுள்ள யானை. (W.)

வியாளவரி viyāḷa-vari, *n.* <வியாளம் + வரி¹. (Arch.) A line of carbel stones having *yāḷi* images, in the inner shrine of a temple; கோயிற் கர்ப்பக்கிரக மதிலின் உச்சியில் யாளியுருவிலமைந்த அலங்காரவரி.

வியாளவியூகம் viyāḷa-viyūkam, *n.* <*vyāla*+. Serpent-like array of an army; பாம்புவடிவான படையமைப்பு. (சுக்கிரநீதி, 338.)

வியாளாயுதம் viyāḷāyutam, *n.* <*vyālāyudha.* Mysore-thorn. See புலிதடுக்கி, 1. (மலை.)

வியானபூமி viyāṉa-pūmi, *n.* <விசானம் +. Burial and burning ground; சுடுகாடு. (யாழ். அக.)

வியானன் viyāṉaṉ, *n.* <*vyāna.* The vital air of the body, which causes circulation of blood, one of *taca-vāyu*, q.v.; தசவாயுவில் ஒன்றானதும் இரத்தவோட்டத்தை யுண்டாக்குவதுமான வாயு.

வியாஜ்ஜியம் viyājjiyam, *n.* See வியாச்சியம்.

வியாஜம் viyājam, *n.* <*vyāja.* Pretext, pretence; போலிக்காரணம்.

வியுத்சர்க்கம் viyutcarkkam, *n.* <*vyutsarga.* Perfect or absolute renunciation. See சர்வசங்கநிவிர்த்தி. (மேருமந். 144. உரை.)

வியுற்பத்தி viyuṟpatti, *n.* <*vyut-patti.* 1. (Gram.) Etymological origin, derivation; மொழிப்பொருட்காரணம். (யாழ். அக.) 2. Profi-

ciency in language, literature, etc.; கல்வியறிவு. *Colloq.*

வியுற்பத்திபண்ணு-தல் viyurpatti-paṇṇu-, *v. tr.* <வியுற்பத்தி+. To create anew; புதிதாயுண்டாக்குதல்.

வியுற்பன்னன் viyurpannaṉ, *n.* <*vyut-panna.* Erudite scholar; one who is proficient in language, literature, etc.; கல்வியறிவுள்ளவன்.

வியூககாரன் viyūkakāraṉ, *n.* prob. *vyūti-kāra.* Tailor; தையற்காரன். (யாழ். அக.)

வியூகபேதம் viyūka-pētam, *n.* <*vyūha* +. Breaking of the serried ranks of an army; படையணி முறிகை. (யாழ். அக.)

வியூகம் viyūkam, *n.* <*vyūha.* 1. Military array; படைவகுப்பு. (குறள், 767, உரை.) 2. Manifestation of Viṣṇu as three divinities, viz., *caṅkaruṣaṇaṉ, pirattiyumṉaṉ, aṉiruttaṉ* or as four divinities, including *vācutēvaṉ*, one of five *tirumāl-nilai*, q.v.; திருமால்நிலை ஐந்தனுள் சங்கருஷணன் பிரத்தியும்நன் அநிருத்தன் என்ற மூவகையாகவும் வாசுதேவனைச் சேர்த்து நால்வகையாகவுமுள்ள நிலை. (அஷ்டாதச. தத்வத். 3, 43.) (பரிபா. 3, 81, உரை.) 3. Multitude, collection; திரள். (W.) 4. Herd, flock; விலங்கின் கூட்டம். (சூடா.)

வியூகாவதாரம் viyūkāvatāram, *n.* <*vyūhāvatāra.* See வியூகம், 2. சங்கருடணா . . . அநிருத்தரென்னு நால்வியூகாவதாரம (பிரபோத. 45, 4).

வியோகம் viyōkam, *n.* <*vi-yōga.* 1. Death; சாவு. (சூடா.) 2. Separation; பிரிவு. யோக வியோக முடைத்தோன் (ஞானா. 61, 9). 3. Release from births; பிறவிநீக்கம். (W.)

வியோடம் viyōṭam, *n.* <*vyōṣa.* (சங். அக.) 1. The three medicinal drugs. See திரிகடுகம், 1. 2. Dried ginger; சுக்கு.

வியோமம் viyōmam, *n.* <*vyōman.* Sky, atmosphere; ஆகாசம். (பிங்.) நாமமும் வடிவுங் கிளைத்திடு வியோமவடிவமாய்த் தோன்றும் (திருக்காளத். பு. சிவமான். 22).

வியோமமஞ்சரம் viyōma-mañcaram, *n.* <*vyōma-mañjara.* Flag; கொடி. (சங். அக.)

வியோமமண்டலம் viyōma-maṇṭalam, *n.* <*vyōma-maṇḍala.* See வியோமமஞ்சரம். (சங். அக.)

வியோமரூபிணி viyōma-rūpiṇi, *n.* <*vyōma-rūpiṇī.* (Śaiva.) A mystic centre in the body, one of *cōṭaca-kalai*, q.v.; சோடசகலையு ளொன்று. நிற்கின்ற வியோம ரூபிணி நீலாகாயம (தத்துவப். 142).

வியோமாட்சரேகை viyōmāṭcarēkai, *n.* <*vyōmākṣa-rēkhā.* (Astron.) Celestial latitude, as of planets; கிரகங்களின் அட்சாம்சநிலை. (W.)

விர்த்தாந்தம் virttāntam, *n.* <*vṛttānta.* See விருத்தாந்தம். (W.)

விர்த்தி¹ virtti, *n.* <*vṛtti.* See விருத்தி¹. (W.)

விர்த்தி² virtti, *n.* <*vṛddhi.* See விருத்தி².

விரக்தம் viraktam, *n.* <*vi-rakta.* See விரத்தம். (W.)

விரக்தி virakti, *n.* <*vi-rakti.* See விரத்தி.

விரகசன்னதம் viraka-caṉṉatam, *n.* <*viraha*+prob. *sannata.* See விரகநோய். விரக சன்னதமேற்ற (தாயு. எங்குநிறை. 10).

விரகதம் virakatam, *n.* See விரகறம். (மலை.)

விரகதாபம் viraka-tāpam, *n.* <*vi-raha*+. See விரகநோய். (W.)

விரகநோய் viraka-nōy, *n.* <விரகம்+. Distress or sorrow of lovers due to separation from each other; காதலர்க்குப் பிரிவாலுண்டாகும் வேதனை.

விரகம் virakam, *n.* <*vi-raha.* 1. Separation, especially of lovers; பிரிவு. 2. See விரகநோய். (சூடா.) 3. Drying up; உலர்த்துகை. மணமுதலோடிந்திற்கும் . . . வியாபாரம பொறை பிண்டீகரணம் பாகமொடு விரக மிடங்கொடையாகும (வேதா. சூ. 77). 4. Lasciviousness, lust; காமம். (W.)

விரகவேதனை viraka-vētaṉai, *n.* <id.+. See விரகநோய்.

விரகறம் virakaṟam, *n.* cf. விரகதம். Horse purslane; வெள்ளைச்சாரணை. (மலை.)

விரகறியாளன் virakaṟi-y-āḷaṉ, *n.* <விரகு +அறி-+. Wise man; அறிவுடையோன். நறும் பூங்கரந்தை விரகறியாளர் மரபிற் சூட்ட (புறநா. 289).

விரகன் virakaṉ, *n.* <id. 1. Skilful, clever person; சாமர்த்தியமுள்ளவன். விரகா நெடுஞ்சுவர் தன்னுமாபோலே போக்கி (ஈடு, 1, 5, 10). 2. Expert; வல்லவன். தமிழ்விரகன மொழிகள் (தேவா. 132, 11). 3. Kinsman; சுற்றத்தான். விரகர்கட்கெல்லாம் வெறுப்பனவே செய்யும (பழமொ. 123).

விரகாவஸ்தை virakāvastai, *n.* <*virahā-vasthā.* Love-lorn condition of separated lovers; பிரிந்த காதலர் வேதனைப்படும் நிலை.

விரகி viraki, *n.* <விரகம். 1. One pining from the separation from one's beloved; பிரிவாற் காமநோயுற்றவ-ன்-ள். 2. Lascivious person; காமி. (W.)

விரகிணி virakiṇi, n. <vi-rahiṇī. (யாழ். அக.) 1. Woman separated from her lover; காதலனைப் பிரிந்தவள். 2. Salary, wages; சம்பளம்.

விரகிதம் virakitam, n. perh. vyavahita. See விரது. (யாழ். அக.)

விரகிதன் virakitaṉ, n. <vi-rahita. Lonely man; தனியே விடப்பட்டவன். (இலக். அக.)

விரகு viraku, n. [T. veravu, K. beragu.] 1. Means, expedient, contrivance; உபாயம். கண ணுலே கணடாலல்லது பழிக்க விரகிலலை (ஈடு, 1, 3, ப்ர.). 2. Cleverness, prudence, tact; சாமர்த்தியம். விரகி னீட்டினுன் (சீவக. 328). 3. Cunning; தந்திரம். காமம விற்கின்ற விரகிற்றேலாப பொய்வினை மகளிர் (கமபரா. இந்திரசித்துவதை. 28). 4. Discretion, discriminative knowledge; விவேகம். விரகினரிலலா வவைபோல் (திருவானைக். சமபுமு. 41). 5. Enthusiasm; உற்சாகம். வனஞ்சென்று விரகிற் புக்கான் (மேருமந. 342). 6. Confectionery; பண்ணியாரம். வேறுபல வுருவின் விரகு தந்திரீஇ (பொருந. 108).

விரகுளி virakuḷi, adv. <விரகு+உளி³. In order; கிரமமாக. விரகுளி யெழுந்த போழ்தில (மேருமந. 719).

விரசம் viracam, n. <vi-rasa. 1. Dislike, aversion; வெறுப்பு. 2. Censure; நிந்தை. (யாழ். அக.)

விரசமாக்கு-தல் viracam-ākku-, v. tr. <விரசம்+. To spoil, mismanage; கெடுத்துவிடுதல். காரியத்தை விரசமாக்கிவிடாதே. Loc.

விரசல் viracal, n. <விரை-. See விரசு⁴. விரசலாய் நட.

விரசாநதி viracā-nati, n. <virajā+nadī. A river on the borders of Viṣṇu's heaven; பரமபதத்தின் புறத்ததோர் யாறு. Vaiṣn.

விரசு¹-தல் viracu-, 5 v. cf. விரவு-. [K. berasu.] intr. To crowd together; செறிதல். விரசுமகிழ்சோலை (பதினெ. விநாயகா. இரட். 1).—tr. To join, unite; பொருந்துதல். அகிலம் யாவையும் விரசுறு தனிக்குடை (கமபரா. கிருவவ. 138). விரசு கோலஙகள் காண விதியிலேன் (கம்பரா. சூளா. 36).

விரசு² viracu, n. <விரசு¹-. See விரசு கணக்கு. Loc.

விரசு³-தல் viracu-, 5 v. tr. <விரை-. Loc. 1. To press hard; to urge vehemently; மிகவுந் துரிதப்படுத்துதல். 2. To repel by words of rebuke; சொல்லாற் கடிந்து வெருட்டுதல்.

விரசு⁴ viracu, n. <விரசு³-. Swiftness; விரைவு. கைவிரசு. (W.)

விரசு⁵ viracu, n. cf. விரிசு. Large sebestan. See பெரியநறுவிலி.

விரசுகணக்கு viracu-kaṇakku, n. <விரசு² +. Detailed account; விவரமான கணக்கு. Loc.

விரசை¹ viracai, n. <virajā. 1. See விரசாநதி. விரசைநதனை புனலின் மூழ்கி (பிரபோத. 45, 10). 2. Darbha grass; தருப்பை. விரசையிற் பொடித்த விலகுவெணணீறு வைதிகபூதி (தணிகைப் பு. இராமனரு. 14).

விரசை² viracai, n. <vraja. Shed for cattle; மாட்டுத்தொழுவம். (இலக். அக.)

விரட்டடைப்பன் viraṭṭaṭaippaṉ, n. perh. வரட்டடைப்பன். A cattle-disease; மாட்டு நோய்வகை. (பெ. மாட்.)

விரட்டு-தல் viraṭṭu-, 5 v. tr. <வெருட்டு-. 1. To chase; to drive away; துரத்துதல். 2. To frighten; to intimidate; பயமுறுத்துதல். 3. To urge vehemently; மிகவும் துரிதப்படுத்துதல்.

விரணகம் viraṇakam, n. <vraṇa-ha. Castor plant. See ஆமணக்கு. (சங். அக.)

விரணகாசம் viraṇa-kācam, n. <vraṇa+kāca. A disease of the eye, causing film over the pupil of the eye; கருவிழியிற் படரும் கண்ணோய்வகை. (சீவரட். 261.)

விரணகாரி viraṇakāri, n. <vraṇa-kārin. 1. Caustic; புண்ணைச் சுடு மருந்து. (பைஷஜ) 2. Escharotic; சருமத்தைப் புண்ணாக்கும் மருந்து. (இங். வை. 31.)

விரணகிரந்தி viraṇa-kiranti, n. <விரணம்¹ +கிரந்தி¹. Cancer; புற்றுரோகம். (இங். வை. 307.)

விரணகிருதி viraṇakiruti, n. <vraṇa-kṛt. Marking-nut. See சேங்கொட்டை, 1. (மலை.)

விரணசன்னி viraṇa-caṉṉi, n. <விரணம்¹ +சன்னி¹. Tetanus; இசிவுநோய்வகை. (பைஷஜ.)

விரணப்பரு viraṇa-p-paru, n. <id.+. Pimple in the eye; கடைக்கண் விளிம்பில் உண்டாகுஞ் சிறுபரு. (சீவரட். 269.)

விரணம்¹ viraṇam, n. <vraṇa. 1. Wound, sore, bruise; காயம். 2. Boil; சிலந்திப் புண். 3. Ulcer; புண்கட்டி. (W.) 4. Fracture; முரிவு. 5. Enmity, hatred; பகைமை. தங்கள் மேல் விரணமதாகி (கந்தபு. இரணியன்யுத. 3).

விரணம்² viraṇam, n. <viraṇa. A grass, *Andropogon muricatus*; புல்வகை. (திவா.)

விரணம்போக்கி viranam-pōkki, *n.* < விரணம்[1] + போக்கு-. Worm-killer. See ஆடு தின்னாப்பாளை. (W.)

விரணவாதம் virana-vātam, *n.* <id.+ வாதம்[1]. A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 123.)

விரணவைத்தியன் virana-vaittiyan̲, *n.* <id.+. Surgeon; புண்ணுக்குச் சிகிற்சை செய்வோன்.

விரத்தம் virattam, *n.* <*vi-rakta*. 1. Renunciation; உலகப்பற்றுவிடுகை. (W.) 2. Dislike; வெறுப்பு. (சங். அக.)

விரத்தன் virattan̲, *n.* <*vi-rakta*. 1. Man free from worldly attachments; உலகப்பற்றில்லாதவன். விரத்தரிற் றலைவ னுகி (கந்தபு. கயமுகனுற். 31). 2. Male ascetic; தவசி. 3. Man who has taken a vow of celibacy; மணமின்றி இருப்பதாக உறுதி செய்துகொண்டவன். (W.)

விரத்தி[1] viratti, *n.* Fem. of விரத்தன். (W.) 1. Woman free from worldly attachments; உலகப்பற்றில்லாதவள். 2. Female ascetic; தவத்தி. 3. Woman who has taken a vow of celibacy; மணமின்றி இருப்பதாக உறுதி செய்துகொண்டவள்.

விரத்தி[2] viratti, *n.* <*vi-rakti*. 1. Freedom from worldly attachments; renunciation of worldly pleasures; பற்றின்மை. (சூடா.) 2. Dislike; வெறுப்பு.

விரதங்கா-த்தல் viratañ-kā-, *v. intr.* < விரதம்[1] +. To observe a vow; நோன்பு மேற்கொண்டொழுகுதல். (W.)

விரதத்துவம் virattattuvam, *n.* <id. State of self-inflicted austerity; பட்டினி நோன்பு முதலியவற்றால் உடலை ஒறுக்கும் நிலை. (W.)

விரதநியமம் virata-niyamam, *n.* <*vrata* +. 1. Observing austerities; நோன்போடு ஒழுகுகை. 2. Act of religious initiation; தீட்சை செய்விக்கை. (W.)

விரதம்[1] viratam, *n.* <*vrata*. 1. Religious vow, act of austerity; holy practice, as fasting, continence, etc.; நோன்பு. ஊக்கித்தாங் கொண்ட விரதங்கள் (நாலடி, 57). 2. Solemn vow, oath; சங்கற்பம். (பிங.) தன்னுடன் பிறந்த முன்னவா விரத முடித்து (S. I. I. iv, 94). 3. Penance, one of seven *puṇṇiyam*, q.v.; புண்ணியம் ஏழனுள் ஒன்றான தவம். (சூடா.) 4. A ceremony. See சமாவர்த்தனம். *Brāh.*

விரதம்[2] viratam, *n.* <*vi-rasa*. Dislike, unpleasantness; அருவருப்பு. விரதமாமை புரிசகுனி (பாரத. நாடுகா. 32).

விரதம்[3] viratam, *n.* <*vi-rata*. Stopping, desisting; ஒழிகை. மான்விரதநோக்கியா (பாரத. நாடுகா. 32).

விரதம்பிடி-த்தல் viratam-piṭi-, *v. intr.* < விரதம்[1] +. To fast; பட்டினிகிடத்தல். (W.)

விரதமிறக்கு-தல் viratam-iṟakku-, *v. intr.* <id.+. To celebrate the conclusion of a religious vow or fast with appropriate ceremonies; சங்கற்பித்துக்கொண்டு நடத்தும் விரதத்தைச் சாந்திசெய்து முடித்தல்.

விரதவுத்தியாபனம் virata-v-uttiyāpanam, *n.* <*vrata* + *udyāpana* Ceremonies at the conclusion of a *viratam;* விரதமுடிக்குஞ் சாந்திச்சடங்கு. (யாழ். அக.)

விரதன் viratan̲, *n.* < விரதம்[1]. See விரதி.

விரதி virati, *n.* <*vratin*. 1. One who has taken a religious vow; நோன்பு மேற்கொண்டோன். விரிசடை விரதிகள் (தேவா. 700, 3). 2. One who has renounced the world; துறவி. (சது.) 3. Celibate student; பிரமசாரி. அருந்திறல் வன்னுதி கற்புடைய விரதியர்க்கும் வேதியர்க்கும் (சிவதருமோ. சிவஞான. 29).

விரயம் virayam, *n* <*vyaya*. 1. Expenditure; செலவு. 2. Extravagance, waste, prodigality; மிகுசெலவு. (W.) 3. Purging; பேதியாகை. (W.)

விரல் viral, *n.* perh. விரவு-. [T. *vrēlu*, K. Tu. *berel*, M. *viral*.] 1. Finger; toe; கைகால்களினுனியில் ஐந்தாகப் பிரியும் உறுப்பு. விரலுளா நரம்பின் (பொருந. 17). 2. See விரற்கிடை. பாதாதி கேசாந்தம் முக்காலே நால்விரலே ஆறுதோரை உசரமும் (S. I. I. ii, 395).

விரல்நொடி[1] viral-noṭi, *n.* <விரல் +. Snapping the fingers; விரலைச் சொடக்குகை.

விரல்நொடி[2] viralnoṭi, *n.* cf. விரற்கொடி. A plant growing in hedges and thickets. See நாயுருவி. (சங். அக.)

விரல்முழி viral-muḻi, *n.* < விரல் + முழி[2]. Knuckle; finger-joint; விரல்களின் சந்துப் பொருத்து. (W.)

விரல்விடு-தல் viral-viṭu-, *v. intr.* <id.+. To count with one's fingers; கைவிரலைவிட்டு எண்ணுதல். *Mod.*

விரல்வை-த்தல் viral-vai-, *v. intr.* <id. +. To do or attempt mischief; குறும்பு செய்தல். *Loc.*

விரலணி viral-aṇi, *n.* <id. + அணி[2]. See விரலாழி. (சூடா.)

விரலம் viralam, n. <virala. See விரளம். (யாழ். அக.)

விரலாழி viral-āḻi, n. <விரல் + ஆழி. Finger-ring; மோதிரம். விரலாழிக்கணை பல்விதக் கணைகளசோத்து (திருவாலவா. 22, 13).

விரலி virali, n. prob. id. 1. See விரலி மஞ்சள். Colloq. 2. cf. விரவி. Cucumber; வெள்ளரி. (மலை.)

விரலிப்பச்சை virali-p-paccai, n. prob. விரவு- +. Purified camphor; பச்சைக்கர்ப்பூரம். (சங். அக.)

விரலிமஞ்சள் virali-mañcaḷ, n. <விரலி + மஞ்சள்[1]. A kind of turmeric; மஞ்சள்வகை.

விரலேறு viral-ēṟu, n. <விரல் + எறி-. Hand-drum; ஒருவகைத் தோற்கருவி. (சிலப். 3, 27, உரை, பக். 106.)

விரவல் viraval, n. <விரவு-. Mixing, mixture; கலப்பு.

விரவலர் viravalar, n. <id. + அல் neg. See விரவார். மெலியோரா வலிய விரவலரை யஞ்சார் (நன்னெறி, 9).

விரவார் viravār, n. <id. + ஆ neg. Enemies; பகைவர். விரவாரு ணுணுப் படலஞ்சி (நாலடி, 88).

விரவி viravi, n. cf. விரலி. Cucumber; வெள்ளரி. (சங். அக.)

விரவியல் viraviyal, n. <விரவு[2] + இயல்[2]. 1. (Rhet.) A figure of speech. See சங்கீரணம், 2. (வீரசோ. அலங். 34, உரை.) 2. (Gram.) Word in which letters peculiar to Sanskrit occur; வடவெழுத்து விரவிவரும் சொல். இடையே வடவெழுத் தெயதில் விரவியல் (வீரசோ. அலங். 40).

விரவு[1]-தல் viravu-, 5 v. [K. Tu. berasu, M. viraguga.] tr. 1. To mix, mingle; to join, unite; கலத்தல். விரவு மலா வியன்கா (நெடுநல். 27). 2. To approach, draw near; அடைதல். விரவினோா தணக்க லாற்று (காஞ்சிப்பு. தக்கீ. 1.) 3. To be similar; ஒத்தல். மலைவிரவு நீணமார்பின் மைந்தன் (சீவக. 1885).—intr. 1. To be united, joined; to be mingled, mixed; பொருந்துதல். புரியுரி விரவிய வரையினர் (தேவா. 450, 1). 2. To cultivate friendship; to keep company; நட்புக்கொள்ளுதல். பணிவாரொடே விரவுமின் (தேவா. 469, 5).

விரவு[2] viravu, n. <விரவு-. Mixture; கலப்பு.

விரவு[3] viravu, n. <விரகு. See விரகு, 4. (W.)

விரவுத்திணை viravu-t-tiṇai, n. <விரவு[2] +. (Gram.) Tiṇai of a word common to both uyar-tiṇai and akṟiṇai; உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகவருஞ் சொல்லின் திணை. (யாழ். அக.)

விரவுநெல் viravu-nel, n. <id. +. Mixed paddy; கலப்பு நெல்.

விரவுப்பெயர் viravu-p-peyar, n. <id. +. (Gram.) Noun common to both uyar-tiṇai and akṟiṇai See பொதுப்பெயர், 2. விரவுப்பெயரின் விரிந்து நின்றும் (நன். 255).

விரள்(ளு)-தல் viraḷ-, 2 v. intr. <வெருள்-. To be frightened, பயப்படுதல். (W.)

விரளம் viraḷam, n. <vi-rala. 1. Being wide apart; செறிவின்மை. மாலையில் புஷ்பம விரளமாகத் தொடுக்கப்பட்டிருக்கிறது. 2. Intervening space; இடைவெளி. (இலக். அக.) 3. Leisure; அவகாசம். (இலக். அக.) 4. Rarity; அருமை. படித்தவர்கள் விரளமாயிருக்கிறார்கள்.

விரளல் viraḷal, n. prob. விரவு-. Narrowness; closeness; நெருக்கம். (நாமதீப. 777.)

விரளிமஞ்சள் viraḷi-mañcaḷ, n. See விரலிமஞ்சள். Loc.

விரற்கடை viraṟkaṭai, n. See விரற்கிடை. (W.)

விரற்கிடை viraṟ-kiṭai, n. <விரல் + கிடை[2]. Finger's breadth = 8 grains of paddy = $\frac{1}{12}$ cāṇ; விரலகலமுள்ள அளவு. (W.)

விரற்குறி viraṟ-kuṟi, n. <id. +. Finger impression; விரலின் இரேகையை ஒற்றியெடுத்த அடையாளம். (C. G.)

விரற்கொடி viraṟkoṭi, n. cf. விரல்நொடி[2]. A plant growing in hedges and thickets. See நாயுருவி. (மலை.)

விரற்சாடு viraṟ-cāṭu, n. <விரல் + சாடு[4]. Glove for the finger, put on while shooting arrows; விரலுறை. (சீவக. 2202, உரை.)

விரற்சுற்று viraṟ-cuṟṟu, n. <id. +. Whitlow; நகச்சுற்று. (W.)

விரற்செறி viraṟ-ceṟi, n. <id. + செறி[2]-. Curved finger-ring; நெளி. விரற்செறியினைத் திருத்தலும் (தொல். பொ. 22, உரை).

விரற்படுவன் viraṟ-paṭuvaṉ, n. <id. +. Abscess finger, thecal abscess; விரலில் வரும் புண்கட்டிவகை. (M. L.)

விரற்புட்டில் viraṟ-puṭṭil, n. <id. + புட்டில்[1]. 1. See விரற்சாடு. விரற்புட்டி வினை சிறிய (கலிங். 534). 2. Thimble; அங்குஸ்தான். (W.)